229

ஸ்ரீ

தடாதகை பிராட்டியார்

# திருமண வெண்பாமாலை



இஃது

திருப்பூர் - ச. வே. சன்மா அவர்களால்

இயற்றப்பட்டு

ஷை யூரிலிருக்கும் திருவாவடுதுறை மகா ச...

சீடராகிய

வித்வான் - ம-ா-ா-ஸ்ரீ சந்திரசேகர முதலியார் அவர்களால்

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு

சென்னை : சாது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

...துச் சரியான துந்துபிஹு வைகாசிமீ

...ராஜிஸ்டர் செய்யப்பட்டது [விலை அணு 12.

14 JAN 1923
MADRAS
O-,8MSA,T
N23
68066

12 JAN 19

# முன்னுரை

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்--(குறள்)

என்னுமிக் குறளுக்கு இந்நூலே சாலச்சிறந்த சான்றா மிந்நூலாசிரியர் தம் விடா நோயினின்று மிப்பாமாலை பாடிச் சுகம்பெற்றமையின். இவர் கருதிய காரியங்களெல்லாம் கருதியவாறே யம்மாதவரருளினா லாதலான், இதனைத் தொடர்ந்து மீனாட்சி நீதி வெண்பாவென மற்றோர் நூலும் இயற்றியுளர். இந்நூல்களில் பண்டை நூல்களாகிய சிந்தாமணி, இராமாயணம், திருக்கோவையார், பெரியபுராணம், புறநானூறு, திருக்குறள் முதலான நூல்கள் கையாளப்பட்டுள. நாடு, நகரம், நகரணி இப்படலங்கள் பல அலங்காரங்களோடு பாடப்பட்டுள. திருமணப்படலத்துடன் விரவி உலாவியற் படலம் பாடப்பட்டுளது. அங்கு சிறிது அகத்தமிழிடம் பெற்றுளது. தெளிவின்பொருட்டும், வித்தியாலாகாதார் அபிப்பிராயத்திற் கேற்பவும் இயன்றவளவு சந்தி பிரித்தெழுதப் பட்டுள்ளன. இந்நூலை ஆத்யந்தமாகப் பரிசோதித்த ஆசிரியர்க்குத் தன் வந்தனத்தை என்றுஞ் செலுத்துகின்றார்

இந்நூல் ஸ்ரீ மகாசத்தியார் மணமாலையாதலின் இதனை சைவாமுதமெனல் மிகையாகாதாகலின் அவ்வமுதத்தினை யெல்லோருமுண்டு இன்புறக் கோருகின்றார். மேலும் இந்நூலைப்பற்றிய அபிப்பிராயங்களை ஆன்றோர் அன்புடன் அருளுவார்களாகில் அவற்றைச் சிரோபூஷணமாகக்கொண்டு நன்றி செலுத்துவார்.

தங்கள் விதேயன்

ச. வெ. சன்மா

# சாத்துகவிகள்

---

கோயம்புத்தூர் சர்வகலாசாலை

(கவர்ன்மெண்டு காலேஜ்) தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்

மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் தனித்தமிழ் பரீட்சகருளொருவருமாகிய

அச்சங்கத்தாரால் தங்கத்தோடா பரிசுபெற்ற

**ம-ா-ா-ஸ்ரீ பண்டித கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றிய**

வெண்பா

கணமாலை வண்டார் கடம்பவனத் தென்னை
மணமாலை வெண்பா வகுத்தான்—குணமாலை
நன்மா மறையோன் நறுந்தமிழ்நூல் கற்றறிந்த
மன்வேங் கடசுப்ப மால். (1)

ஈசனடி மறவான் ஈசனை யல்லாது
பேசுதலோன் றில்லாப் பெருமையோன்—காசினியில்
செந்தமிழி லார்வமிகு சிந்தையான் செய்நூல்போல்
எந்தநூல் காண்போ மினி. (2)

மாசற்ற சிந்தை மகிழவரு வெண்பாவான்
பேசுமீ னாட்சியம்மைப் பேர்விரவும்—தேசுற்ற
நீதிநூ லொன்றுசொற்றான் நேர்வேங் கடசுப்ப
மாதவத்தான் தேவியருள் வாய்ந்து. (3)

---

சென்னை சிவரஹஸியப் பதிப்பாசிரியராகிய

**வித்வான் ம-ா-ா-ஸ்ரீ க. சதாசிவஞ் செட்டியார் பீ. ஏ.**

**அவர்கள் இயற்றிய**

வெண்பா

திருப்பூர்வாழ் வேங்கிட சுப்பையன் படிகப்
பொருப்பூரும் பச்சைப் பொருப்பு—விருப்பூர
ஓதினு னேர்வகையி னுற்றமண வெண்பாவு
நீதி வெண்பாவு நினைந்து. (1)

கோயம்முத்தூர் வக்கீல்

### ம-ா-ா-ஸ்ரீ சி. கே. சுப்பிரமண்ய முதலியார் பீ. எ,

### அவர்கள் எழுதியது.

திருப்பூர் பிரம்மஸ்ரீ. ச. வெங்கிடசுப்ப சன்மா அவர்களால் இயற்றப்பெற்ற ஸ்ரீ தடாதகைப் பிராட்டியார் திருமண வெண்பாமாலை என்னும் பிரபந்தத்தைப் பார்வையிட்டேன் இது ஒரு நல்ல முயற்சியேயாகும் சர்வலோக மாதாவாகிய ஸ்ரீ மீனாட்சியம்மையாரின் திருமணமாகிய விஷயமாயிருத்தலின் இப்புண்ணிய கைங்கரியம் யாவராலும் பாராட்டத்தகுந்ததேயாம். ஸ்ரீ சர்மா அவர்களின் நன் முயற்சியை உலகம் ஊக்கப்படுத்துவதாக.

---

### ஆசிரியர் ம-ா-ா-ஸ்ரீ வித்வான் சந்திரசேகர முதலியார்

### அவர்கள் இயற்றியது

வெண்பா

மணிக்கு மணியாக மாண்புள் விப்பா
வணிதனக் கேயணியா வாக்கப்—பணித்தவேன்
சொற்கொண்டு சொற்றனன் சோதித்தேன் சாலவுஞ்
சொற்றிறமுங் கண்டேன் களித்து.

---

### திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது

கண்பாவு நெற்றிக் கடவு ளிடத்தமரும்
பெண்பால் மணமாலை பெற்றவிதம்—வெண்பாவால்
வேங்கட சுப்பன் விருந்தளித்தா னன்பர்க்குத்
தேங்குதிருப் பூர்மறையோன் தேர்ந்து.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்





## ஸ்ரீ தடாதகை பிராட்டியார்

# திருமணவெண்பா மாலை

### பொதுப்பாயிரம்

#### காப்பு

திருச்சிற்றம்பலம்

மலைமகளைத் தன்னிடத்தும் மாண்புறு மானைத்
தலைமகனைத் தன்வலத்து மிட்டுக்—கலைகடொழு
வெள்ளேற் றமர்ந்த வரனாரங் கானந்தம்
கொள்ளக் குதித்ததாள் காப்பு. (1)

சங்கரன் சீர்புதல்வன் செல்வக் கணபதியை
மங்கலஞ் செய்வல் மனத்தானும்—பங்கமற
வாக்கானுஞ் சொல்லானும் வானமுதின் மன்றனூல்
நோக்காப் புகல வருள். (2)

### சத்தியைப் போற்றல்

முத்தொழிலு மாக்குவான் மூலனு மீசற்குச்
சத்தியராச் சேர்ந்தார் சிலம்படிகள்—பத்தியொடு
எக்காலும் போற்றுவ லென்னெஞ்சத் திப்பாக்கள்
தக்காங்கு தோன்ற வருள். (3)

### சிவத்தைப் போற்றல்

வெண்பாவான் பாடுவான் வேணபயன் காணவே
பண்பா மலித்தென்னாட் டன்னையின்—எண்பால்
வரைவின் வகையுட் சுயம்வரஞ் சாற்ற
கறைமிடற் றூன்றாட் டுணை. (4)

### நாமகளைப்போற்றல்

நோயற்ற வாழ்வு நினதடியார் கட்கருளித்
தோயுற்ற நற்பொருளு மோசையுங்—காயுற்ற
செய்யுட்பா வின்னினங்கட் சீர்நேரச் செப்பவே
பெய்யு மழையெனவே பேசு. (5)

### குருவணக்கம்

ஆதியி லன்பர்க்கா வண்டருல கஞ்சென்று
சூதின்முறை செய்த பிரமனை—வாதினால்
வென்று விளங்குமவ ரில்லா ளிவட்டந்து
நன்றுதவி னார்தாட் டுணை (6)

### அடியார் வணக்கம்

ஆதியி லன்பர்க்கா வண்டர தாணையான்
மேதினி மேவிமத மேலுழன்ற—தீதிகந்து
மன்னோங்கச் செய்தவரு பான்மூவர் தாட்கடமை
என்று மறவாதென் னெஞ்சு. (7)

### அவையடக்கம்

யாழ்பயில் தீஞ்சொ லசுணப் பறவைமுன்
வீழ்சும்மைத் தாய பறையன்ன—தாழ்வதா

மென்பாவி னோசைதா னின்னுரை தோய்ந்தவர்க்
கென்னன்மைத் தென்பே னிது. (8)

கற்பா லடைமணியும் காண்மதியின் பொற்புநேர்
சொற்பா லடைமறவு மிக்கார்—நற்பா
லழியுமெனத் தம்மதியா லாட்டிநீர் நற்பா
மொழிபுணர்ந்து கொள்வார் மகிழ்ந்து. (9)

முந்நீர் பிறந்த பவளமுஞ் சங்குமற்
றந்நீர் பிறந்த தரளமு—மந்நீ
ருவர்க்கு மெனினு ருகவாரே யற்றே
சுவர்க்கந் தருமென்னிச் சொல். (10)

பாவி னினிதாந் தடாதகை யம்பிகையின்
தாவிற் றிருமணம் வெண்பாவான்—மேவளவில்
செப்பத் துணிந்தேன் தெருளிலான் றாண்டலான்
தப்பறுத் தொப்புவீர் தேன். (11)

கொங்கத்துட் கானங்க ளாரநிறை குன்றுகளும்
பொங்குநீ ரோடு பவானியு—மங்கரையில்
சத்திய மங்கலத்தான் சங்கரசன் மன்புதல்வன்
பத்திமிகு வேங்கிடசுப் பன். (12)

ஆற்றொணா வெப்பநோய் தோற்றவே யன்றப்பர்க்
காற்றினா ரீசனா ரென்றுன்னி—தோற்றவே
தன்னருளா லின்னமுதி னாடலு ளொன்றோதும்
நன்னய மேற்றான் நயந்து. (13)

மாதிடங் கொண்டானை மாநிலத்தார்க் கோதுவான்
சோதி முனிவரா யீங்கடைந்து—நீதிநெறி
யுய்த்தற் குயிற்றிய வுத்தமப் பாக்கட்கண்
வைத்த பொருளே வழி. (14)

இடாதா ரியல்பு மினிதாக விப்பா
விடாது வழிபடுத்தும் பண்ப—தடாதகை

அம்மையார் தம்மணச் செம்மைசொல் தன்மையான்
இம்மையம் மைகட் கினிது. (15)

ஓதுவார்,

மன்னுதலு மாயுளு மேற்றமும் புந்தியும்
தன்னிகற் றிண்மையு நீண்மரபும்—எண்ணுபல
காரியமும் சீர்பெறுவ சீரியரா வீற்றிருப்பர்
மாரியும் பெய்யு மலிந்து. (16)

தருவர் தடாதகையர் தாம்வேண்டு மின்பம்
பெறுவர் பெரும்பேரிம் மன்றல்—நறுநூலி
னோர்பாவி னேரெழுத் தோதுவர் தீருமே
பேரரிய வூறுகளும் பேசு. (17)

பாயிரம் முற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



# I. நாட்டுப்படலம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரனு ரந்தமிகச் செந்தமிழ்ப் பாண்டியபத்து
வந்து வழுதியா வீற்றிருந்து—சந்தநால்
சீர்மை வழுவாது செங்கோல்செய் நாட்டினது
நேர்மை நலஞ்செப்பு வாம். (1)

நீறணி வண்ணன்வான் நீணீரின் மேய்ந்துதிரு
காரணி வண்ணன் நிறங்கொண்டு—பேரணியின்
பெட்டகங் கொட்டியபோற் பெய்தவே நாடெங்கும்
மட்டிலா மண்ணிற் கினிது. (2)

பானுவின் வெம்மையைப் பார்வத னேலனென
வானுயர் வாரிநீர் வாய்மடுத்து—மானுறை
கானஞ் செறிந்தவக் குன்றெய்தி பெய்தவே
கோனதக முங்குளிரக் கொண்டு. (3)

வான்வழங்க நுன்செழிக்கத் தண்பண்ணை தப்பாது
தேன்பொழிப தீங்கனிகள் கன்னலும்—வான்புனலோ
டொன்றியே யோடுப வூடறுக்கும் பாலாறு
கன்றினை யுண்ணினைமே தி. (4)

தெங்கம் பழமுதிரத் தேன்கீறிப் பூகநெற்றி
தங்கநிற வாசினி தான்போழ்ந்து—சங்கையில்
மாங்கனிகள் பேர மதுநிறைவா ழைப்பழங்கள்
தாங்கொள்ப தம்பகைவர் நட்பு. (5)

விண்ணுறு செல்லு மிளஞ்சூல கொண்டல்கள்
நண்ணுத்தம் கூட்டமது நண்ணிநிவந்—துண்மகிழ்
தாவர நெற்றியிற் றும்பொழிப வோங்கலென
பூவரக் காவுக்குத் தேன். (6)

பொதியமென் பாவைதன் பானிறைக் கொங்கை
பொதிந்தாள் புயலென்னுங் கச்சான்—கதித்தெழுந்து
சூன்முதிர்ந் தீன்றுள் சுகமீயு மாறுய
வான்பொருளை யென்னு மகவு. (7)

ஆர்த்த மகவினுக் காரமுதா யூறுபால்
சேர்த்த வருவிநீர் தான்பெற்று—போர்த்துதவழ்ந்
தூர்வளே யொண்பொருள்க ளேற்றூட வாங்காங்கு
தேர்வளே தீம்பா லு முண்டு. (8)

பேதைப் பருவத்துப் பேதையரோ டாடற்கா
வாதைகட் பல்விகந்து வேகத்தோ—டோதைசெய்
தோடுவா ளாடுபொருள் கூடவா ரிக்கொண்டு
தேடிவரு தோழரையு மேற்று. (9)

முல்லைக்கு முத்தந்தந் தல்லா மருதத்துக்
கெல்லா வகையாட றன்காட்டி—நல்வதுவை
தாணுகித் தந்தனள் சுந்தாஞ்சே ரீற்றுக்கள்
போனுள் சுடுசுரத்தி னூடு. (10)

ஊடோடித் தேங்கித்தான் தந்தபொரு ளீந்துமற்
றீடோயா தொன்றில்லை என்றுசொல—தாடோய்ந்து
பாலை மருதாக மாற்றியபி னெய்தலையும்
மேலையதாச் செய்தாண் முனிந்து. (11)

முத்தும் மரகதமும் வச்சிரமு மிச்சைகொள்
சத்து நிறைமணிகண் மற்றனவும்—வித்துரும
மாலைசேர் பைம்பொன்னு மற்றலோ கங்களும்
சாலத் தருவதந் நாடு. (12)

சாலைக ளெங்கெங்குஞ் சிந்திய நன்மணியும்
வேலைநருங் கொள்வார்க ளன்மையான்—மேலைநாள்
செய்தவத் தோர்வாழுஞ் செழுநாடே நாடியவண்
செய்விளைவின் மாண்புரைப்பா னென். (13)

திருச்சிற்றம்பலம்

ஆக வெண்பா 30

(நாட்டுப்படலம் முற்று)

# II. நகரப்படலம்

திருச்சிற்றம்பலம்

நங்கையென் பாண்டிய நாட்டிற்கு நல்லவய
வங்களங்க வாதிதே யங்களாக—திங்களிகழ்
ஆனனம் மாமதுரை யாகிப் பொலிந்ததே
ஏனத்தே யங்களின் மேல். (1)

செய்யாட்குச் செம்மலரா வாணிக்கு வெண்மலரா
மெய்யுணர் வார்க்கருள் பீடமா—வையக
மெல்லியற் கேற்ப திலகமா மேம்பாட்ட
சொல்லிய வில்லா நகர். (2)

அரியர ராலயங்க ளன்றூட மாறு
சரிவர சந்திபூசை கொண்டு—பரிந்துதவு
வான்படு கோபுரங்கள் வண்ணமிகச் செப்புமே
தேன்படு நன்னகர மென்று. (3)

வேதியர்வா யோதுநால் வேதத் திசையெங்கு
மேதினிவாய் மாதவரை யேகாது—போதினறை
உண்டுகக்கும் வண்டென வாண்டே யிருத்துமம்
மண்டு மறையவரின் மாண்பு. (4)

அண்ணலின் கோயி லமைப்பியம்பிற் றேவர்வேந்
தெண்ணத்தா னும்மெண்ண வொண்ணாதே—நண்ணரிய
வாடகப் பித்திகைய காடகச் சாந்தமா
மாடத்த வெள்ளிக்கூ ரைத்து. (5)

பற்பலவாம் பண்டங்கள் கண்டோர் மனங்கவர
சிற்பமைந்த மாடத்துக் காசிலங்க—நற்புடவை
பீதாம் பரமுதலா பொன்னிலங்கு பாளிதங்கள்
மீதாமங் காடிகண் மிக்கு. (6)

அறங்கள் பலவியற்ற வாளுகி யையர்
மறங்கொ ளரசர்க்குந் தந்து—திறந்தெரிந்து
வேண்டுநர்க் கார்வ மடங்க வளித்திடு
மாண்ட விளைமாக்கண் மிக்கு. (7)

திருச்சிற்றம்பலம்.

ஆக வெண்பா 37.

(நகரப்படலம் முற்று)

# III. திருவவதாரப்படலம்

திருச்சிற்றம்பலம்

அம்மாண் டணிநகர்க் கொப்பற்ற வோரரசு
செம்மாண் டனிக்குடையன் செய்பளியன்—இம்மண்ணுள்
வேந்த ரனைவரும் வேண்டி வழிபடும்
தேர்ந்த திறலான் றெளிந்து. (1)

அம்மை யமைப்பயனு லம்மைத் தடாதகை
உம்மென் மலயத் துசன்றனது—இம்மை
புனிதஞ்செய் வானங்கோர் பூவையாத் தோன்றி
இனிசெய் திறஞ்செப்பு வாம். (2)

வென்றி புனைகழலான் றென்ன னளியன்
இன்றென்று வீகையு முள்ளான்காண்—நன்றுமிக்
காழ்ந்த வறிவனூ லாய்ச்சியான் வேளெழிலான்
தாழ்த்து மலயத் துசன். (3)

அன்னுன் றனிக்கோலா லம்புவியுண் மன்னுயிர்கள்
முன்னாள் புறந்தான் மனுநெறியின்—சின்னாட்சென்
றம்மரபிற் சூரசே னன்மகட் காஞ்சனையென்
னம்மாதைக் கொண்டான் மணம். (4)

பொலன்கொடி பொங்கமொடு மேவினளே திண்டோள்
இலங்கு முமையாளைப் போன்று—கலந்து
அனங்கனுக் கோர்குறியா யாண்டொழுகி யாற்றூர்
இனஞ்சேர் மகவின்றே யென்று. (5)

கண்ணுதலை முப்பொழுது மூவகையும் போற்றினர்
எண்ணமது முற்றுறக் கோரியே—மண்ணுள்ளார்
இன்மை யொழிவானீங் தில்லார்க ளெல்லோர்க்கும்
நன்மை பலசெய்தார் நயந்து. (6)

எத்தன்மைத் தானுந்த மெண்ண முடிவிலதான்
இத்தன்மை எண்ணின ரெண்ணத்தான்—உத்தமமா
யொன்ருெழி யோர்நூ றியற்றப் பரிமகமே
யொன்று மனத்தினரா யோர்ந்து. (7)

இயற்றலு மிந்திரன் மந்திர நீத்துக்
கயற்கணு ளோடம் மகஞ்செய்—வயவேந்தின்
முன்னுதித்தா னின்னலறச் சொன்னுனிம் மாற்றத்தை
நண்ணுவை நாடியன வென்று. (8)

முன்னிய மெய்க்கண் மொழியு மவற்கீது
உன்னிய வுண்டாம் மகமகத்தான்—என்ன
உரைகொண் டொழுகுதியே லுள்ளனுவா யோர்பெண்
அரையர்க் கரைய வணங்கு. (9)

இன்னணஞ் சாற்றிய வேற்றதார் வேம்பனும்
நன்னெறி யீதென்ன நாடியே—பன்னூலாய்
அந்தணர் தங்கைகொண் டம்மகஞ் செய்வித்து
தந்தனன் தக்காங்கன் னூர்க்கு. (10)

மகந்தனிற் பெய்நெய்யு மண்டி புகைந்து
புகலிடமற் றேறிச்சேண் போந்து—மிகச்செரிந்த
விண்ணின் படாகிகர வவ்வாய் படர்ந்தொளிரும்
மண்டிலமு மூழ்கினுன் முற்று. (11)

கொண்டனர் விண்ணவர் கோதிலா வாகுதிகள்
விண்டன ரங்ஙனம் வேண்டுபயன்—திண்டிறற்கு
எரிவேள்வித் தீயி னெழுதா மறையின்
பெரிதுமாண் போடுதித்தார் பெண். (12)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதமும்
நெஞ்சத் தவர்க்கருள் செவ்வாயும்—கஞ்சமலர்
நேர்தரு செங்கரமு முத்த முறுவலும்
நேர்ந்தாராய் நின்றன ராங்கு. (13)

மின்னி னிடையராய் மின்னு மணிபூண்டு
தன்னிக ரில்லாத தண்மதியின்—முன்னுமிக
வாணிலவு தந்து வகையோ டருள்சுரந்து
பேணுவ மென்முகமுங் கொண்டு. (14)

நாவாற் றுதிசெய்ய நாவாயி ரம்பெற்ற
நாகர னைதையனுக்கு மாகாதே—தாவா
வெழிலினுக் கேயெழிலா வேணவர்க்கே யன்பா
வழிசிறக்க வந்தாரின் மாண்பு. (15)

மூன்று வயதினராய் முத்த முறுவலொடும்
மூன்று முலையொடுந் தோன்றவே—தோன்றல்
உவகை யிலாஞ யிருத்தல்கண் டாங்கு
சிவந்ததோ ரின்பமீன் சொல். (16)

தோன்றூஅல் தோன்றலே தோன்றுங்கால் தோன்றுது
ஆன்றோர்த மாணையு மீதாமே—மூன்று
முலையது முன்னினனே முன்னின்று கொள்வான்
நிலையது நீகலங்கே னின்று. (17)

ஆற்றுவை யாண்மகவி னுற்று வினைமுற்றும்
போற்றுவை பண்புடனு மிம்மகவு—நோற்றவின்
வேள்வித் திறத்தினு லேற்றனை யன்னையை
வாள்வாளா வீறு மரசு. (18)

மண்ணுலகு மன்றிமற் றவ்வுலகு மேற்பவும்
கண்ணுதல்வர் கொள்கையே யோங்கவும்—விண்ணின்று
நின்னில் விழைந்தவா றீண்டடைந்தா ரோர்மகவாத்
தன்னிக ரில்லாத தாய். (19)

வள்ளன் மலயத் துசன்வலத்த காஞ்சனை
யுள்ள முருக வுருவிலிடை—தள்ளவே
கொங்கை ததும்பித்தேம் பானிறையத் தேமொழிக்கும்
அங்க ணிடனுடி ன (20)

அளவினே டாடின ரம்மை விழியா
ரளவிடற் கின்றம் மதுரை—யுளமகிழ்வு
முத்தமி ழோங்கவு மீனவ னீண்மரபு
சித்தங் களிக்கவுங் கண்டு. (21)

தீங்குதலை மார்பினிடை யாரமென சோரவும்
ஆங்குறுவ ராங்கே மகிழவும்—பாங்குடைய
மாமணிய வாரங்கண் மேகலைக ளார்ப்பவும்
பூமணியிற் ரேன்றினர் பூத்து. (22)

செய்யவாய் சேலென்கண் சீரிழைகண் மண்டிய
வெய்யவாங் கொங்கைகள் விம்மவே—பையவே
தாங்காண் மகவெடுத் தீந்தாளோர் முத்தமும்
பாங்காகப் பெற்ருனின் மிக்கு. (23)

விடாத பெயலென்ன வேணவெலா மீந்து
கெடாத விருந்தியுந் தந்து—தடாதகை
என்றந்த ரத்தன் றெழுந்த பெயரினையே
நன்றதென நாட்டினு ராங்கு. (24)

வழங்கலின் வானோர வேண்டுநர்க ளின்றி
தழங்கருவி வெற்பரது தந்தும்—ஒழித்திடுமின்
எம்மிறை யெலலையு ளீரராண் டென்றிசைத்தான்
எம்மிறை யுள்ள முவந்து. (25)

பொன்னுங் கலனும் புகழ்பட்டுங் நன்செய்யும்
மன்னு மனையுமே லாக்களு—மின்னும்
பரியுங் கரியுமா வீந்தா னிரவு
தெரிதரு மெப்பொருளுந் தேர்ந்து. (26)

பெற்ற வகையாற் பெரிது மவருகந்து
சொற்ற வருட்சொற்கட் சொல்லரிய—நிற்றனர்
தம்மாக்கங் கொண்டேகற் கற்று. (27)

மகத்துதித்த வன்னை வளர்பாங்கின் றன்மை
மசமதி மானுமெனின் மாறே—அசுத்தமுக்கு
முற்றுந் தொலைத்தவர்க்கு முன்னின்று காட்சிதரு
பற்றுக்கோ டாயவெளி போன்று. (28)

வேளை முனிந்து விழிக்கணையான் வீழ்த்திய
காளையு மவ்வெழிற் காற்றுனே—வேளையின்
வன்மையும் பாரான் வருமிழிவுந் தேராது
நன்மையுற நாடுவனே நாள். (29)

செம்பொன் னணிகளானுஞ் செய்ய மணிகளானும்
அம்மனை கோலியாங் காயத்தான்—தம்மனத்த
தோழிச் சிறார்கூடிச் சிற்றடிசி லென்னட்டு
ஆடுவா ரில்லற வாட்டு (30)

கார்குழன் மென்னடைய நுண்ணிடை மின்னனார்
நேர்கொண் டுதவுவரோர் நூற்றவர்—சீர்கொண்ட
தேங்கோதை மார்பன் றிருமகட் காங்காங்கு
தாங்கொண்ட சாற்றுவர் தாழ்ந்து. (31)

ஒப்புவமை செப்பற்கற் றிவ்வுலகு மவ்வுலகுந்
தப்பறச் சாற்றுதே தன்னயம்—இப்புவி
யாள்வா னடைந்தாரெம் மன்னையார் நாள்நாளும்
வாள்வா ரிந்துவை வென்று. (32)

கரங்கோத்துக் காலிணைத்துக் கண்டோர் மனத்துப்
பரம்பொருளாம் வெற்பாது பேதை—பிறநங்கை
சுற்றி வருகோலஞ் சுற்றுஞ்சுற் றல்காணு
பற்றிவிடு பம்பரம் போன்று. (33)

கண்புதைத்து நன்மணிகள் கைந்நிறைத் திட்டேகி
கண்ட விடந்தன்னி லிட்டபின்—பண்டேபோல்
முன்னிடங் கொண்டு முழுது மறைப்பித்துப்
பின்னிடங் கேட்பார் பரிந்து. (34)

நிழல்வாயும் நின்றுரை நில்லாரே பற்றும்
நிழனிலா வாட்டத்து நேர்மை—முழுமதிநாள்
பன்மீன் றருசுடரைத் தண்மதி கொண்டன்ன
நன்றுள்ள தாயிற்றப் போது. (35)

மல்லிகை முல்லை மரிக்கொழுந்து சண்பகமும்
வெல்லும் வெறிநிறைக் குஞ்சியர்—அல்லிடை
ஆடுவா ரெண்ணிறந்த வாட்டங்க ளன்னுரோ
டோடுவார் பாடகக்கா ணைந்து. (36)

கண்டந்த ரத்தின்கட் காணுக் கரந்திருந்த
உண்டான் சடையிடத்தா னுள்ளத்து—கொண்டகருத்
தென்னே யெனதொளி யிம்மங்கை முன்னில்லை
என்னவே யேங்கின னங்கு. (37)

அம்பிகையி னுடல்க ளாடுதொறு மன்பராம்
நம்பியர்கள் நன்மனத் தானந்தம்—பம்பியே
ஆரமு துண்டார்க்கு மாரமு தாயிற்றே
தோவெவர் தீரவவ் வாட்டு. (38)

அம்மானை யம்மணியிட் டாக்கிய மூன்றேந்தி
தம்மாயந் தோலவே யாடுவார்—அம்மானை
செங்கரத்து நில்லாச் சுழறருவ சோதியொடு
மங்கையி னங்கை முனிந்து. (39)

பாவை மகவெனப் பண்புட னூட்டினர்
பூவையர் தந்த துகிலுடீஇ—கோவை
நெறிபிற ழாச்செய்த நேர்பெற நாற்றிப்
பரிவுடன் பூந்தொட்டி லிட்டு. (40)

கண்டார் களிப்புற்றார் காணரிய வாடல்கள்
கொண்டார் குலம்விளங்க வந்தவரை—தண்டா
வெடுத்தணைத்தா ரீந்தா ருவகையான் முற்ற
மெடுபிறப்பை மாற்று மகவு. (41)

அன்னமே யல்லியின் மெல்லிடைப் பாவாயென்
வண்ணஞ்சேர் தாலாட்டு கேட்டுவந்—துன்னிரு
துஞ்சிலாக் கண்க டுயில்கொள நேருமென்
நெஞ்சங் களிக்கச்செய் வாய். (42)

நித்திலத் தாம்பாக நீர்நிறை மாணிக்கச்
சத்திநன் றிண்பலகை சேர்த்திய—உத்தமமா
மூசனுன் றேவியா ராடி யுகந்திருக்க
மாசற்ற ருற்றார் மகிழ். (43)

ஆண்டோர் சதுர்யுகமு மன்போடு நோற்றாலும்
காண்டற் கரிதாய வம்மையார்—ஈண்டிவ
ரெத்துணை கால மியற்றிய நற்பயனே
இத்துணைபா யிங்குதித்த பாங்கு. (44)

தவத்தாற் சிறந்தான் றபாதனன் றென்பர்
அவன்செய் தவமாண்பின் மேலா—மிவன்செய்
மகத்தின் பெருமையான் மண்ணுலகு முய்த
லகத்தினிடை யெண்ண லெவன். (45)

முற்ற தவத்த முழுதண்ட மும்புறப்பான்
பெற்றில தாயவிப் பேற்றினை—முற்றுதவர்
வைகு மிடனாய வைகைசூழ் கூடலார்
செய்த சிறப்பே யிது. (46)

அருளின்றி யந்தலத்தார்க் கில்லை யருளும்
பொருளிலா ரில்வழியில்லை பொருளும்
அறிவிலா ரில்வழி இல்லை யறிவும்
ஓத்திலா ரில்வழி இல், (47)

ஆதலின்,

பள்ளிப் பருவத்துப் பங்கயச் செங்கரத்தாள்
பள்ளியிட வுன்னினர் பாங்குடனே—எள்ளரிய
நன்னா ளுதவுமென நன்காய் முனிவோர்கள்
சொன்னார்கள் சாலச்சோ தித்து. (48)

சொன்னவம் மாற்றஞ் சுரிகுழலாட் கேட்டுவப்ப
சொன்ஞன் சிறுமன்னர் யாவர்க்கும்—சொர்னத்தால்
ஓலை விடுப்பித்தா னேகையோ டெண்டிசையின்
காலையிற் கொண்டடைமி னென்று. (49)

எண்ணிய நாளுற்ற வெல்லையி லெண்ணரிய
துன்னிய சுற்றமு மற்றவரு—மெண்ணிலர்
தொக்கனர் தொக்கார்க்குத் தக்காங்கு செய்தலான்
மிக்க மகிழ்ந்தார் மனத்து. (50)

அமர்ந்த கழகத்து ளாதரம் மிக்கு
அமர்விலரா நல்லோரை நோக்க—நமதையர்
சாற்றினு ரவ்வோரை செல்கின்ற தண்மியென
போற்றினர் பெற்றதனை முற்று. (51)

நல்லோரை வந்ததென நாட்டினுர் சொற்கொண்டு
நல்லாசான் பால்விடுத்து நாமகளைப்—புல்லுவிக்க
முற்று முவகையா னேற்று மொழிந்தனர்
கற்றவரு மேமகிழத் தான். (52)

ஆசிக ளார்த்த வணிமண்ட பத்திடை
கோசிகர் பெற்றனர் பேருவகை—ஏசிலா
வானத் தவருமே விண்மலர் பெய்தார்த்தார்
தானத் தவன்கைபே போன்று. (53)

பூம்பட்டும் பொற்கலனு மொண்மணியு மற்றுமுள
எப்பொருளு மெல்லையின் றீந்தபின்—தப்பாது
கொண்டீரோ வல்லீரோ வென்றுசா வித்தருவன்
வண்மைபா லுவினமு மிக்கு. (54)

கலைத்தெளிவிற் பொன்னவனை முன்னிப் பொலிய
மலைத்தலாங் கல்வியும் கற்க—நிலைத்தக
வில்பரி தேர்கரி யாய்ந்தநல் லாசான்பாற்
செல்ல விடுத்தா னரசு. (55)

விசையனையும் வெற்றிபெற விற்றொழிற் றேர்ந்து
நசையுடைய தெவ்வரு நாண—புசபலமும்
முன்னிற்க லாற்று முனிவுமுற வவ்வேந்தும்
தன்னாற்ற விற்றளர்ந்தான் றாழ்ந்து. (56)

ஆற்றலினைக் கண்ட வரசேது செப்புமே
போற்றற் குரிய பொலன்மௌலி—தோற்றமொடு
சூட்டுவா னுளறிந்து சொன்மினென வாதரத்தான்
நாட்டினர் நன்னு ளறிந்து. (57)

கங்கையொடு துங்கநற் றீர்த்தங்க ளொன்பதுவும்
தங்கக் குடமதிற் றாம்பெய்து—புங்கவர்
ஓதினர் நான்மறைகட் போதுசே ரக்கலமுன்
சோதிதரு வேள்விதனை வேட்டு. (58)

சிங்கா தனத்தைச் சிறப்பொடு பூசித்துத்
துங்க நவதீர்த்த பொற்கடமும்—சங்கையில்
பொன்பெறு மாமணிசேர் மௌலியு மாண்புடனே
நன்கமைத்தார் நாகத்தின் மீது. (59)

அடுத்திருந்த வாற்றலான் மிக்க வமைச்சு
தொடுத்திருந்த துய்யவத் தானை—கொடுத்துவந்த
கட்கினிய காட்சிக் களிப்புற வீதிவாய்
பெட்பினொடு போந்த வலம் (60)

வந்த வமயத்து வாயிற்க ணையர்க
ளந்தநற் றீர்த்தகுட மங்கிருந்து—தந்துதவ
ஏற்றனராப் பாங்கிய ரேகிரு ராட்டினர்
நாற்றமிகு தோயமப் போது. (61)

ஆயத்தா ரைஞ்ஞூற்று ராங்கடைந் தன்பினொடு
தோயம் புலரத் துடைத்தும்பின்—நேயமுடன்
பொற்றுகி லுஞ்சூட்டிப் பொற்புகாண் பூணிட்டு
நற்சமயந் தந்தா ரவண். (62)

அந்தரர் மந்தார மாரி பொழியவும்
அந்தண ராசிகள் கூறவும்—பந்தமிகல்
கோசிக ரில்லாரும் பல்லாண்டு பாடவும்
மாசின் முடிசேர்த்தான் மாண்பு. (63)

ஆடின ரப்சரர் பாடினர் யாழினர்
சூடினர் சூடரிய மௌலியென—தேடினும்
காணற் கரியதாங் காட்சிக் கனதவர்கள்
காணக் கிடைத்தவா றீது. (64)

வையகம் வாழ்க வரிசைமன் னன்வாழ்க
செய்ய மறையவரு மாக்களும்—உய்க
நறும்பெயல் பெய்து நலனுறுக நாடு
உறுநரும் வாழ்க வினிது. (65)

பொங்குநீர் வைப்பு பெருமையுற மன்னுயிர்
பொங்கு மனத்தினொடு பல்குக—பங்கமற
பேணிவரு மன்னவன் கோலோங்க விந்நூலைப்
பேணுவரும் பல்க பெரிது. (66)

பண்ணமை பாணர் பலவிசை பாடலும்
எண்ணறுங் கூத்திய ராடலும்—வண்ணஞ்சேர்
ஓராழித் தேரினு னேங்குசுடர் காணுமுன்
நீராடச் செய்யு நிதம். (67)

இனிதாகத் தோய்ந்தபி னிங்கிதங்கட் சொல்லும்
பனிமொழியார் பட்டுடையுஞ் சாத்த—கனிமொழியார்
போற்றிக் கடம்பம் பொலிவினொடு மீளுவர்
ஆற்றினி லம்மலர்கட் கொண்டு. (68)

ஈந்தான் றனதர சீர்க்கோதைக் காதரத்தான்
போந்தா னருளுலகம் பன்னாட்பின்—வேந்தகல
வாற்றா யாற்றின ராற்றுவ வாற்றினில்
ஏற்றவரை யேற்றமப் போது. (69)

திருச்சிற்றம்பலம்.

ஆக வெண்பா 106.

**திருவவதாரப்படலம் முற்று.**

# IV. அரசியற் படலம்

திருச்சிற்றம்பலம்

ஆரணஞ் சொன்னீதிக் காரணங் காட்டுவான்
ஆரணவ ணங்கேயங் காண்டநெறி—பாரதனுக்
கோதினஞ் சோதியின் சொன்னயஞ் சேர்த்துமன்
நீதிசேர் நூலின் முறை. (1)

கைக்கொண்ட தன்னரசு காவல ரேத்தவும்
மைக்கொண்ட சேல்விழியார் சூழவும்—பெய்க்கொண்ட
தண்கணைய விண்படரு மொண்ணிறச் சோமனோர்
பண்புட னோம்புவர் பார். (2)

மன்னவன் றென்னவன் றந்தநற் பூங்கொடி
கண்ணனும் பின்னிடவே யாண்டனர்—தன்னிகரில்
நேர்மையுங் கோனிலையுங் கொண்டொழுகு பான்மையான்
நேர்வர்யா ரன்னா ரரசு. (3)

விண்ணவரு மெய்ம்மறந்து சித்திரப் பாவையென
அண்ண லெழினிலையா லானாரேல்—மண்ணவரின்
உள்ளத் துவகையு முச்சாகத் தெல்லையு
முள்ளுந் திறத்ததோ வோர். (4)

அரசிறைகொள் செம்பொன்ன வாத்தாணி யண்மி
திறன்மிக்க வேழரிமா தாங்கு—விரைமலர்
பெய்தொளிர் மேன்மணிக ளிட்ட தவிசின்மேல்
எய்திருந்தா ரெண்ண லரிது. (5)

மங்கையர் பொற்களாஞ் சேந்தி மருங்கிருக்க
செங்கையின் சாமரையார் தாமிரட்ட—அங்கவர்
சாயற்கண் டன்றோ கரந்தா னுருவின்றி
சாயலர் சாயலழிப் பான். (6)

மேதினியிற் றென்னவ னீன்ற வமுதமே
ஆதியி லையோத்தி யாண்டானின்—மீதாக
வண்டா ரருளு மமைவு முருவானு
காண்டற்கென் றேயாத லான். (7)

ஒளிவிரி மாமணி நீண்முடி மன்னர்
தளிர்புரை தாட்களைப் போற்றக்—கிளர்மணி
சென்றரசச் சீரடிச்சி லம்புக டேய்ந்தவே
நன்றென்னு மாணிக்க நீர். (8)

வான்மிசைக் கார்குலம் போர்த்த படாங்களே
தான்றரு கூரிரு டோன்றாமல்—பான்மதியே
விண்ணிழிந்து வந்திங்கு வைகியபாங் கொத்ததே
மண்ணையா ளன்னை முகம். (9)

தாமரை கட்குவியுந் தண்மதி நேர்மதியர்
சாமரை கையேற் றிரட்டவும்—பூமகளும்
தோற்றத் தொடுதோன் றித் தோளணைத்து கந்திருந்தாள்
போற்றவே வந்தனள் போன்று. (10)

பொன்னகர் வாசத்தின் பேரின்பம் பெற்றுய்ய
நன்னகரித் தென்னவனு டாமென்ப—தன்பதியின்
இல்லானு யிந்திரனு நீடுத லாற்றானுச்
செல்வானங் கண்டரையுங் கொண்டு. (11)

தாயொப்ப வோம்புவர் தங்குடிகள் யாவரையு
மேயொப்ப வாவியாத் தோன்றியே—வேயொத்து
நேர்ந்து நெறிபுகல நாடேது நாடிலதான்
ஏந்திழை ரேந்தல்கள் பங்கு. (12)

நூலின் வழியொன்றி நீதி நடத்தலான்
மாலி; னளிபணிதா மேற்றனரே—காலினமும்
வேதியரு மோதரிய வந்தணருந் தந்தமுறை
மேதினிக்குச் செய்தனர் மேல். (13)

ஆளுமுறை யங்நக ரெப்பொருளு நாடாது
நாளுமங் கேற்பவ ரில்லானா்—நீளுலகத்
தில்லார்க ளில்லாரே யில்லவிறை யீகையான்
உள்ளவர்க ளாயினரே யோர். (14)

அஞ்சுவ ரின்றே யரசமன் றம்மெவரும்
தஞ்சமென் போரு மவணின்றே—நெஞ்சத்து
நல்லரா யெல்லோரு நன்னு லொழுகலான்
அல்லவை யாற்றுவரே யின்று. (15)

வான வழக்கென்ன வேண்டுந ரின்றுக
தானங்க ளானுச்செய் தன்மையான்—கானவரு
மெண்ணத்துங் கள்ளங் கருதா துயர்வுற்றார்
வண்ணமிது வேந்தின் றிறம். (16)

நேமி முறையுடன் முற்றவு மோம்பலான்
பூமியி னின்னல ரின்றுனா்—நாமினி
காண்கு மரசெவன் காதலொடு பூதலத்து
மாண்புடைத் தாயது மற்று. (17)

மங்கைப்பருவ மணித்தாக நற்றாயும்
தங்கையா லாற்றுவ வாற்றற்கா—சங்கையில்
உள்ளத்தா னுள்ளுவ னெள்ளுவ ணெஞ்சத்தை
விள்ளவே சொன்னாள் மகட்கு. (18)

அன்றளந்த செய்கையு மாகுநா ளெய்யாது
இன்றியல வேண்டி னியலுமோ—சென்றேநான்
திக்விசயஞ் செய்து திரும்புவ னக்காறும்
சிக்கலற் றேயிருப்பீர் தேர்ந்து. (19)

நூன்முறை யாய்ந்த நுவலறிவின் மந்திரிகள்
நாண்முறை யொப்பவா யோதலான்—மாண்புசேர்
மைதீர் மடங்கற் றவிசி னினிதிருந்து
செய்தனர் தக்கன மிக்கு. (20)

மானுட னேனைவா னேரேற்ற நல்லமுத
மானு மினியதமிழ்ப் பாடையின்—நூனுற
வாற்றிய பாக்களைப் பாவலர் பாடவங்
கேற்றமுடன் கொண்டார் செவி. (21)

வானமுதுந் தோல வறிவின ராக்கிய
கானமுறு செந்தமிழ னுண்டுவந்து—கானத்துண்
மாதவரு மந்தணரு மற்றையரு மின்புற
மாதவிசின் வீற்றிருந்தார் மால். (22)

இல்லார்கட் கல்வி கடுப்ப நுடங்கிடை
நில்லா ரளவொத்தங் காடுப—வல்லார்
நரம்பினிகற் றீங்கானஞ் செய்பசெவி கொண்டும்
வரம்பின்றி யீந்தார் மகிழ்ந்து. (23)

ஈந்து தளர்ந்த விருகாமு மாரியின்
மாந்தி யமைந்த விருவிழியும்—ஏந்தல்
அமரரி யாதனமு நோதகவ தாகி
அமர்வழித்த தன்னையர்க் காங்கு. (24)

பலவகையா நன்மை பரிந்திழைக்கப் பாரில்
நலமிகக் கல்வி நல்கி—பலவகைநோய்
பற்று தகல பலவோட திச்சோலை
முற்றுகொளச் செய்தார் முரண். (25)

முதலீரி லோர்சத்தி முன்னடைந்தித் தென்னன்
மதலையா யீண்டிருந் தாண்டார்—அதனலம்
செப்பற்கு மாற்றலில நோற்றுரா ரீங்கரோ
ஒப்புமை யோதவு மோர்ந்து. (26)

கன்னி யதனொடென் னாமத்த தந்நாடு
மன்னுந் தடாதகையார் மாணரசான்—துன்னுனர்
என்று மிலராகி யேதப் பிறவிகடல்
சென்றிருப்ப ரண்டர்முன் னங்கு. (27)

வெற்ப ரதுமகவா வந்ததின் காரணம்
பொற்புறச் சாற்றிடல் வேண்டின—நற்றவரின்
இச்சைக் கிசைந்து குடமுனி கூறுவர்
அச்சபைக்க ணுள்ளார் தமக்கு. (28)

விசுவா வசுசென்விஞ்சை யண்முற் பயந்த
விசுவா வதியுந்தன் றந்தை—விசுவாச
முள்ளத் துடையளா யுய்ய வகையெய்ய
மெள்ளத் தொழுதிருந்தாள் முன். (29)

தொழுத வகையாது சொல்லுவை செல்வி
முழுது மொழியாதென் மாட்டுப்—பழுதிலா
சத்தியர் தாட்டுணை கொள்ளுவகை சொல்லுமென
இத்தகையாச் சொன்ன னினிது. (30)

பொருடீர் பரம்பொருளின் பேர்பெறு விஞ்சை
அருளுடன் றந்தங் குரைப்பான்—உறுதிதரு
பஃறுறையும் வேண்டப் பகர்ந்து விரிவுதவ
அஃகலின் றேற்ற ரகத்து. (31)

நானுன்கி னூன்கு பீடத்தின் பேருடைய
வானரு மும்பரும் வந்துதொழுந்—தேனுறும்
ஆலவாய் வீற்றிருக்கு மந்தமிகு சத்தியரைச்
சாலத் தொழுதலே சார்பு. (32)

சாற்றுவா னேற்றவா றப்பீடம் பூசிப்பான்
கூற்றன்ன வெவ்வினைக டீரவே—மாற்றருஞ்சீர்
மாதவரு விண்ணவரு மங்குற்றே பெற்றனர்
யேதமிற் றம்மிச்சை யெண். (33)

எந்தை யரிலேவர் முந்தை யடைந்தனரால்
தந்த மனமிசைவ தானிகரில்—சுந்தரியின்
பீடந் தொழுவார்கட் கொல்லாத வேதுசொல்
பாட மகற்றலே பாங்கு. (34)

அடையாதா ரில்லை யவனுற் றருளைக்
கடையா யவருமே கண்டு—இடைவிடா
வின்பமீ னீசருல குற்றா ரெனினது
மின்மனத்துக் காயதுவே நேர். (35)

மொழிமுற்று மேற்றிலள் முன்னடந்தாண் மூதூர்
வழிதானே கொண்டாள் வேற்கண்—இழிதகவ
ஆற்றின்கண் ணுற்றன வஞ்சாளா முற்சென்றாள்
மாற்றமொன் றேகொண்டம் மாது. (36)

காரியத்திற் கண்ணு யினளாத னக்காட்டு
பூரியமா வின்னுர்ப் பெவன்செய்யும்—மாரியதில்
காடுங் கடுஞ்சுரமுங் கானகமும் பின்னிட்டுத்
தேடுமம் மன்கோயிற் சென்று. (37)

செய்யமென் சீரடி செங்குருதி கொப்பளிக்க
நையலளா நீள்சுரம் பின்னிடச்சென் —றையனது
மெய்யுறை கொண்டாண்முன் மெய்யுரை தான்பூண்டு
செய்தவங் கொண்டாள் சிறந்து. (38)

ஊணுறக்க நீர்வேட்கை யூங்குதன் னுள்ளடக்கி
வேணு மமயத்துங் காய்சருகு—பேணுமுறை
ஆவிக் களவாக் குளிர்புனலு முட்கொண்டு
மேவியிருப் பார்மே னிலை. (39)

கொண்டார் புலப்பணி கொள்கைகட் கேற்றாங்கு
விண்டார் தனதுநிலை வாணுதல்—பண்டோர்
மருதயா ழின்னேர்ந்தோர் மாசிலையுங் நெய்ப்ப
வருமிசையோ டோதினு ரொன்று. (40)

அன்னே யழகிதோ வாற்றேனு யான்புலம்ப
மின்னே ரிடையாளே மன்மமென்—என்னுவி
பன்னளு மாய்ந்துனது பாதமே காண்பாக்கு
இந்நாளுந் தோர்கிலதே யீடு. (41)

அன்பர்தா மன்றைய வாசனைக் கேற்றங்கு
நின்பத சேவையி னிற்பரால்—நின்றேழு
மென்பாலு மெல்லா வளவையி னில்லாது
வன்ம முடைய தெவன். (42)

வேத முடிவாகி வேதாந்த ரூபமாய்
நாத வடிவாய நின்றாட்கள்—போதரவு
மாதரவு மீய நயந்தென்முன் நண்ணிமதி
தீதறச் செய்க தெளிந்து. (43)

அலறி தனதாவி யற்றிடுமா றியோகின்
புலருவள் மெல்லியல் மேவ—மலையன்
திருப்புதல்வி பாதமே பாவித்தாள் முன்னம்
இருத்தின ளீரிலதோர் யாப்பு. (44)

காராயோ வென்னைக் கலங்கிநிற் கிற்பாள்காண்
பாராயோ வேந்தன் பரிதாபம்—நேராயோ
நின்னருட் டெண்டிரைதோய் வேந்தனுக் கும்மருள
மின்னிடைப்பூங் கொம்பன்னாய் மிக்கு. (45)

அவனிதனி லென்னிகர்வா ராருண்டோ சொல்லாய்
பவனி தனிவரும் பாவாய்—இவணின்று
உன்னுமை மோதியோ வென்னடைந் தேனன்காண்
இன்னுவோ மேலும் பல. (46)

பெற்றேன் பெரிதும் பிழையதா மிவ்வாழ்வு
கற்றிலேன் நின்னுடற் காண்பான்—பெற்றிலேன்
பூந்தா மரையானும் போற்றரிய நின்பாதம்
சேர்ந்தாரின் செல்லாற்றுச் சார்பு. (47)

இடரென்று மன்றென்று மன்னறிவிற் கூட்டி
அடருமென் னெஞ்சினை யாட்கொள்—படருமென்
பண்டை வினையின்பாற் பட்டொழுகா தென்னுயிர்நி
னண்டை யணுகற் கருள். (48)

புண்ணிய முன்னியே போற்றினேன் பாக்களான்
பண்ணிற் புகன்றேன் பலவிதமாய்—எண்ணரிய
உற்பவத் துய்த்தாமற் றுய்யவிலை யெய்யவே
கற்பதோ ராறே யருள். (49)

போற்றுவாள் கோதிலமே கோதையே கோதறுக்கும்
தோற்றத்தின் தோற்றமே தெய்வமே—நோற்றவரின்
இன்னமுதே யானந்த வெள்ளமே யென்னேயென்
இன்னிசை கேளாத வாறு. (50)

இமயவா னன்பின் திருமகளே யுன்றன்
இமயமா மன்னை களிக்கச்—சமயமே
கூடிக்கொண் டாடலாற் கொல்லுதியோ வென்காலம்
நாடிநிற் காண்பதெந் நாள். (51)

ஆயத்தா ரீட்டத்து ளந்தரளங் கட்கொண்டு
நேயத்தோ டாடிவரு நிற்றேழி—காயத்தான்
நேராதோ நேர்ந்தக்கா னேர்வந்தென் சொற்கொண்டு
தாராயோ வானந்தத் தாள். (52)

சிற்றில்லிற் சீறடிசி லட்டிட்டா டாயத்து
பற்றுள்ள பாங்கி பகையாளோ—வெற்றிபெற
வந்திங் குதவுவாய் வேண்டிய வெந்தனுக்குப்
பந்தமிகல் சுந்தரியே பார்த்து. (53)

அண்ட முழுதுஞ்சென் றையரு ணொந்துருக
கொண்ட தவர்செய் தவப்பயன்—கண்டவரும்
அங்கிழிந் தன்னையே செல்வையா லென்னவே
தங்கலின் றேகினு ராங்கு. (54)

குழவி யுருவுட னோர்கணப் போழ்தில்
குழலி னினிதாஞ் சொல்லும்—மழலையின்
முன்னனு ருற்று முழுதவய மாகின்று
சொன்னுர்த மெண்ணந் தெளிந்து. (55)

செய்தவத் தேதுயா தஃதியம்பா யென்புழி
பெய்தனேர் பேரன்பி னன்னைமாட்—டுய்த்துணர்வான்
சாற்றினர் பின்னிடைகொள் சாதனஞ் செய்யென்ன
போற்றினள் பின்னயவுந் தந்து. (56)

இம்மக ரூபமா யின்புறுவா னென்மாட்டு
நும்மக மிக்கருள் கூர்கென—அம்மாற்ற
மொப்ப விசைத்தா ரருளொடு மன்னையுந்
தப்பின்றி பின்பிறவிப் பேறு. (57)

கலையகலங் கற்ற சிலம்பன் சிறப்பு
மலையத்து சன்றனதில் லாளாய்—தலைமைகொள்
அக்காலத் தங்கியாம் வேள்வி மகவாகி
ஒக்க வருகுது மீ தோர். (58)

இசைத்தா ரிவ்வாறு யவ்வரலா றுங்கே
இசைமிக்கத் தென்சொன் முனிவர்—நசையற
சோத்திர வானந்தஞ் சேரவே கொண்டார்கள்
தோத்திரங்கள் பற்பலவுந் தொக்கு. (59)

திருச்சிற்றம்பலம்

ஆகவெண்பா 165

அரசியற்படலம் முற்று.

# V. திக்விசயபடலம்

திருச்சிற்றம்பலம்

ஆதிசத்தி நீதியுட ஞண்ட முறைநெறியின்
ஓதின மின்னமு மன்னேயர்—மேதினியின்
எண்டிசையும் வென்றுபி னண்டருல குஞ்சென்று
கொண்ட திறஞ்செப்பு வாம். (1)

கொண்டதம் மாற்றல் குவலயம் தேர்ந்தபி
னண்டர்க டாமு மறிதற்கா—மண்டியவாள்
வீரர்கட் பாலுரைத்தா ரீரிரண்டு சேனையுஞ்
சீர்செய்க வென்னுமச் சொல். (2)

அமைச்சரு மற்றுள்ள மாப்படை யாளரும்
அமைவுறக் கேட்குமு ஞர்வமுடன்—இமைப்பொழுதில்
தந்தா ரிரதங்கள் தாவிச்சென் மாபூட்டி
முந்து மென்மொழிந்தே முன். (3)

தேர்கொண் மறவரும் மாகொண் மறவரும்
பாரி ளிகரில் பகடுநரும்—ஊர்தியிலா
வாளுழவ ரீட்டமும்வ யங்கொலிநீர் சும்மையைத்
தாழுறச் செய்யுமே தான். (4)

தானே கடலும் தரங்கக் காலாளும்
ஆனே யழகுள்ள வங்கமும்—ஊனேயுண்
வாட்கள் சுறவுமா வேண்டுமுன் வந்தடைந்தால்
தோட்கள் துளிராவோ செப்பு. (5)

வான்முக டோங்கிய மீற்கொடிகள் தேர்முடிமேல்
பான்மதியு மஞ்சுமா றுடலான்—சான்றும்
அடையார் தலை துமித்துத் தானே விறியப்
படையாற் பகர்வம் பயம். (6)

தூயிணை வெண்கோட்ட தூந்தரளக் கார்கரிகள்
தானிகர்ந்த பன்மேறு செல்லாறு—தூயிணைவெண்
கோட்டினன் கொல்லுவங் துங்குறும் பென்பவே
மேட்டியார் வேழத் திரள். (7)

ஐங்கதியு நன்கறி நன்னிறத்த பாய்மாக்கள்
துங்கத் திறலுழவர் தாங்கொண்டு—அங்குறவர்
விண்காண மாற்றுரை வீழ்த்துங் திறங்தெரிந்த
மண்காணு மாண்புள்ள மற்று. (8)

கொண்ட படைகள் வகைவகையாக் கூற்றெடுத்த
அண்டருங் கண்டஞ்சு மாண்பின—எண்டிசையு
மண்ணு ளரசு மடங்கின காணுமுன்
திண்டிறையுங் தாழ்வின்றி தந்து. (9)

வாங்குயிர் வெஞ்சிலை யாயத்தா ரீட்டமும்
தாங்கரும் தோள்வலியார் கூட்டமும்—ஓங்கவே
ஆர்த்தன ரந்த வணிதேரி னேறியே
பார்த்தண்டர் பெய்தார் மலர். (10)

தேர்கடாஞ் செல்கதியான் தேய்ந்தன பாறைகள்
வார்கடாஞ் செல்லி னிடித்தன—பேர்கொண்மா
முன்னீர் கரையிகந்து மேல்வருவ தொத்ததே
வன்னீர்மைத் தாட்படையு மாம். (11)

பார்மகள் தாழ்வுறு பாண்மைத்தா வாளீட்டம்
ஆர்ப்புமிக் கட்டதிக்கு முட்டியதே—சோர்விலா
ஆட்படைக ளுங்கூடி யேகின வேவாமுன்
மாண்புடைய வம்மை யரசு. (12)

தானையர் யானையர் தாவுகலி மாவினர்
ஏனைய தேரினரு முற்செல்ல—வானையின்
வெல்வேமென் செல்படைக ளேகுதா ரெல்செய்யும்
பல்லண்ட மும்மஞ்சப் பார்த்து. (13)

வான்கொள் வரைநிகர் வாய்களிற்று வெண்கோடு
தான்மலி செய்யநிறம் பெற்றவே—ஊன்றோய்ந்து
அன்னவ வெண்ணிற் றிரற்றிளா வேகினவா
லன்னையர் தேர்கட்கு முன். (14)

தெவ்வரில் லேதுவான் றிண்டோள் தினவெய்ய
வவ்வகைய வாதையி னீங்கவே—பவ்வஞ்சூழ்
பாரதனிற் போற்றார் பொரவணடி யோடினார்
நேரா ரெவருமே யில். (15)

திண்டேர் நடந்த தொருமருங் கந்தணர்
மண்டேர் குழாங்க ளளிசெய்ய—வண்டரும்
சாற்றலரு சாயலர் வால்கவரி வீசிவர
ஏற்றனவாப் பல்லியங்க ளார்த்து. (16)

மீனவன வக்கொடி மீதாடு மேன்மையான்
வானளா விந்திர வின்னிறத்த—கானத்தின்
சூர்த்த விலங்குகட் சேரவே யோடுமா
றார்த்தூர்ந்த வன்னையர் தேர். (17)

அங்கய நோக்கி யணித்தாச் சுமதியென்
அங்கன கத்தனே ராய்ச்சியார்—தங்கைக்கோல்
கொண்டூர்ந்தார் நாற்பாலாந் தண்டுகளு முன்னணியில்
மண்டார்கள் சென்றார் முனிந்து. (18)

தந்தனி யாற்றற்பா லீந்தார் தறுகணார்
அந்தமி லவ்வாற்றல் தாம்பெற்று—அந்தரத்தும்
அன்னையே யன்றி யடல்படைக ளுஞ்செல்லும்
அன்னதோர் தன்மை யடைந்து. (19)

முறைமுறைத் தென்னன் மகமகவாய்த் தோன்றி
அரைசுசெய் தன்பருக் கின்ப—முரசொலிப்ப
பாங்குசெய் மாண்பினு யென்பாவுக் கின்பஞ்செய்
தோங்க வருளாய் வரம். (20)

பன்னூற்கண் முன்னதாந் தொன்னூலாம் வேதமும்
பின்னடிகண் முற்றுமே போற்றில—அன்னவ
பூன்பாவான் போற்றுமா றெவ்வாறு மென்னவின்
தன்னளிசெய் தாளுவை தாய். (21)

விரைந்த படைகளவண் வேட்கையான் வெற்றி
மறைந்தா னிரவியுமுன் னில்லா—விரைந்தேகி
வான்கொள வந்தனரென் றையரிடை சொல்வபோல்
தான்கரந் தேகினன் சூழ்ந்து. (22)

மாமணிகள் சேர்த்த மிளிரிழைகள் வீசுமொளி
தூமணிக ளுந்தந்து சூழவே—நேமமுடன்
பெற்றே யுகந்தவரா யிந்திரனை விட்டகன்றார்
பற்றவர னுலகுஞ் சென்று. (23)

காவல ரின்னவா றன்னையர்க் கீந்துய்ய
மேவல ரின்றுக வெங்கனமும்—பாவலர்பா
டந்தமில் வெள்ளியின் வெற்பேக வெண்ணினர்
பந்தமாற் றெம்மன்னை யார். (24)

வாட்களுங் கொய்யுளையும் வேழமும் தேர்களும்
தாட்களின் சும்மையுஞ் சாற்றிற்றே—வேட்கைகொள்
ஈசனு ரின்னருண் மேவுவான் றன்னுதல்
மாசற்ற மேன்மனத்தார் மாண்பு. (25)

வேழங்க ளோங்கலக ளூர்வபோற் சென்றவம்
மேழக மள்ளரு முந்நீரின்—காழகத்த
பாதபங்கட் பூண்ட பரமகிரி சூழ்ந்தவே
பேதமறக் கொள்வான் பரிந்து. (23)

வாண்மறவர் சும்மை வலித்தாகி விண்ணவரின்
மாண்பு மகற்றுமா றுயிற்றே—தோணசையாற்
றேவியார் செய்த செயல்களின் சால்பீதென்
றேவிளப்ப வேண்ட லெவன். (27)

சூலங்கள் சூழ்நேமி சுற்றுபடை தோமரமும்
ஆலங் கவிழெஃகி னாயுதமும்—ஓலமிட
வண்ட ருலகமு மச்சுற்றுக் கொண்டவே
தண்டமிழ்த் தேயத் தரசு. (28)

காவலர் காண்டலுங் காணரிய நந்தியர்பால்
மேவலர் செய்கையைச் செப்பவே—தேவர்போற்
றீசர்சார் சென்றே யிசைக்க விசைகொண்டு
மாசிலார் போந்தார் களம். (29)

போக்கினர் தங்கணங்கள் போய்முன்னின் றுற்றக்கால்
தாக்கினர் தாக்குவார் தீக்கணர்—நோக்குங்கால்
கார்கடலு மஃதுமே காய்ந்தவா றெக்குமா
லார்கழலார் தாம்பொருத வாறு. (30)

இத்தகையாச் சத்தியார் பத்தரான் முற்கோடல்
சித்தமன் றென்றே தெளிதர—உத்தமமாத்
தாமே தலைகொண்டு நம்முன்னர் சென்றேற்பா
ருமேயிப் பான்மை யமர். (31)

பூசிப்பான் போந்தவராம் வித்தியா தரக்குழாம்
நேசிப்பில் லந்நெறி நேராது—வாசமிகு
நன்மலரார் சோலைவாய் நண்ணிப் புகன்றனர்
வன்மைத்தா மக்களத்துப் போர். (32)

அம்புக ளெண்ணில பாய்ந்தன பாயுதிரம்
பம்பிச்சென் றோடிப் பகர்வபோல்—நம்மையர்
முந்துற்ற சுற்றி மொழிந்த வழிபடைக
ளந்தத்தி னிற்கு விலை. (33)

மாரியும் பின்னிட மட்டிலாப் பாணங்கள்
வாரியு மஞ்சவே பாய்தலின்—தாரினரும்
தந்த மனங்கலங்கித் தானையொடு வீழ்ந்தாரால்
அந்தமி லச்செருவின் கண். (34)

காகுத்த னங்கிருந்தே யோங்குபோர் காணு
யாகு மதனில்லை என்றுன்னி—யேகுவான்
ஐயர்மாட் டிச்செய்தி யன்போ டுரைந்திடத்
துய்யபுண் மீதேறி யூங்கு. (35)

தானைப் படைகள் செயலற்ற செய்வாரின்
றேனையர் மேலேகா வீழ்ந்தங்கு—தானையை
மன்னுற்ற நந்தி மனங்கசிந்து நோக்கித்
தன்னுட்டஞ் சோர்ந்தார் தளர்ந்து. (36)

போர்வயின் தாங்கண்ட தாங்கரிய செய்கைகள்
நேர்நின்று விண்ணப்பம் பண்ணவே—தார்பூண்ட
சென்னிய ரேற்றலைந்து செப்புவ ராற்றுவம்
நண்ணியே நாமங் கென. (37)

பாணங்கள் பற்பலவாப் பாய்தலி னன்னவ
நாணங்கொள் வெஞ்சிலைக ளற்றிட்ட—வூனதனில்
ஊடுருவிச் சென்றாழி யுண்டதா கந்தீர
நீடுநிலை யில்லாக் களத்து. (38)

வாண்மள்ள ரக்கைக ளவ்வொடு வீழ்ந்தவே
மாண்கார் முகமள்ளர்க் கற்றேபாம்—காண்மருள
பாதங்கள் பலமுரட்கள் பார்மறைக்க வீழவே
சேதஞ்செய் திட்டனர் தாய். (39)

பரந்தன வெண்ணிலாப் பாணங்கள் வாளார்
சிரங்களுந் தோட்களும் வீழ—மறங்கொண்ட
வெல்லையி லாற்றலா ரெம்மன்னை முன்னினர்
வல்லரா வாரெவரே யாங்கு. (40)

தேர்கட மச்சுக்க ளற்றன தூளாகி
வார்கொண் முரசங்க ளார்ப்பற்ற—நேர்நின்று
கையாள்வா ரின்மையான் வெய்ய களத்திடை
பையப் படர்ந்தவுதி ரத்து. (41)

புறநோக்காப் போந்தார் புணரார் பயமே
மறநோக்கா தோடச் செய்த—திறநோக்கி
உய்யுமா றீதல்லா லேதுண் டையருழை
பையவே சென்றிசைப்ப மென்று. (42)

அமர்களத் தாருயிர் நீத்தாருண் மற்றோர்
தமக்கு முறுமஃதென் றஞ்சி—இமமொப்ப
ஆவியிலா வாளினரோ டாவியிலாப் பாங்கரெனப்
பாவி யொளித்தார் பயத்து. (43)

தாமேயாங் கேகலின் றென்றறிவான் றேவியார்
தாமேயந் நந்தியரைப் பின்னிடுவித்—தாமென்ப
பன்னிறக் கொன்றை பனிமதி சூடியே
முன்னுற வுன்னியதா மீது. (44)

மனத்தானு வின்னலராப் பின்னிட்டே யீசர்
கனத்த சபையின்கட் சென்று—சனத்தொடும்
மாற்றிலரா யப்போரின் மீண்டன மாவியொடு
சாற்றினர் சாலச் சலித்து. (45)

மொழிகண் முரணவே மெய்விதிர்ப் பெய்தே
இழிவுக் கிடமாமச் செய்தி—மொழிந்தனர்
நந்தியார் நைந்துமு னிற்றற்கு மாற்றாரா
வந்துசெய் வீர்தக்க வென்று. (46)

ஆயிடையி னார்த்த வணிமுரச க்களத்துச்
சேயிழையாந் தேவியார் செப்பலான்—மாயிருந்தேர்
மீதிருந்தே நோக்கி முனைவரம் மாற்றாரை
வீதியினும் வாராமை கண்டு. (47)

அலர்கட் சொரிதர மாரியி னங்கு
பலர்சூழப் போந்தார் பதறி—யலரோடு
போர்கொளப் போவர்போல் பொற்றேர்கொண் டவ்விடையின்
சோர்விலா தாடும் வலம். (48)

ஈங்கிவ ளுகுங்கா லோங்கிய வக்களத்துத்
தாங்கருசீர் தேவிக் கிடனுட—பாங்கியர்பால்
சாற்றுவர் தாங்கண்ட தன்மையை யன்னாரும்
போற்றியே சொல்வார் பயன். (49)

தானையு மற்றவருஞ் சாற்றிய வேற்றுத்தாம்
ஏனைய ரோடுமுற் சென்றங்குச் —சோனையென
பெய்கணைக டாங்காப் புறந்தேகச் செய்தாரின்
மெய்காண்பான் மேவினர் முன். (50)

தேவியார் சீருருவுஞ் சேவகச் செய்கையும்
மேவி முகநோக்கான் முற்றறிந்தார்—தாவில்சீர்
சுந்தரியார் சூழ்ச்சி சிறந்த தெனத்தம்முள்
முந்தியே யோர்ந்தவா றென்று. (51)

உழுவைத்தோ லாடை யுடீஇ யயிற்கை
வழுவின்றிக் கொண்டிருக்கக் கண்டு—விழுமத்தோ
டேர்மிகு தேவியார் தேர்ந்தனர் கண்டனைப்
பேர்மிக்க வவ்வமரின் வாய். (52)

முக்கணன் முன்னுற மும்முலையி லம்முலையே
யக்கணமே யற்றங் கழகமையத்—தக்கனவாய்த்
தண்ணளியார் முன்னர்த் தனிநாணிப் பின்னின்றூர்
பண்ணிற் புகல்வார் படிந்து. (53)

அன்றந்த ரத்தினி லோதிய வம்மாற்றம்
இன்றிக் களத்தின்க ணுண்மைகாண்—மன்றஞ்செய்
புண்ணியர் தாமிவரே என்னுஞ் சுமந்திரனும்
பண்டைய பாவனையு மீது. (54)

திக்குதிக்காச் சென்று திறைகொண்ட நாண்முதல்
பக்கலிலே யாமும் படர்ந்தனம்—மிக்கன்பான்
அஃகிய வந்தனத்தா யாயத்தோ டேகுவையூர்
வெஃகிய விந்தன்று காண். (55)

வருதும் வரமீதும் வாய்த்தநல் லோரை
கருதி யிருமினீ ராங்க—ரொருகணமும்
போக்காதே போந்து பரிய பரிசனங்கள்
நோக்காதே கொள்வம் நினை. (56)

ஆயத்துண் மேலாளு மக்கணத்து முற்பணிந்து
நேயத்தான் சாற்றுவா ளிம்மாற்றந்—தேயமே
சென்றியாஞ் செய்தக செய்திருப்பஞ் சாலவு
நன்றிது நாடிக் கொளல். (57)

பேதமை மேற்கொண்ட பேரன்பின் வாரிதியும்
ஓதறியா வெண்ணங்கொண் டென்செப்பும்—தீதிலாத்
தானைகள் மீண்டுந்தம் தண்பதிக் கேகெனவே
ஏனையர்போற் றஞ்சொற் றளர்ந்து. (58)

ஓர்பா லுவகையு மூக்கமு மற்றோர்பா
னீர்பாய் குளமெனன வுண்ணெகிழ்வுஞ்—சார்பாய
தோழிக ளேசல்க டோன்றவுங் காய்ந்தாங்கு
வாழிய வென்றாருள் ளத்து. (59)

கோயிலுட் புக்கனர் கோமக ளென்னன்னாய்
வாயினி னீஙிற்ப தேதுசொல்—போயினி
பண்புசேர் மந்திரியார் மாட்டறிந்து கூட்டுபொருள்
திண்ணிய ளாவை தெளிந்து. (60)

உரைத்திட்டான் தாழ்வுடன் காஞ்சனையு முண்டு
அரைந்திட்டாள் செய்வன செய்கென—வரைந்திட்டான்
பொன்னோலை யெண்டிசையு மண்டமும் போக்கினான்
சொன்னயத்த சொற்கள் தொடுத்து. (61)

திருச்சிற்றம்பலம்.

ஆக வெண்பா 226.

திக்விசயபடலம் முற்று.

# VI. நகரணிபடலம்

திருச்சிற்றம்பலம்

தென்னவன் செல்வியின் வென்றி தெரித்துரைத்தம்
அன்னவர் மன்றலின் மாண்வினைகள்—தன்னிகரில்
அந்நகருங் கோயிலு மங்குள்ள மற்றவையும்
உன்னயஞ்செய் சீர்செப்பு வாம். (1)

அண்ணற் சுமந்திர ராணையினை மேற்கொண்டு
நண்ணற் கருந்தரளக் கோட்டுமா—கண்ணகல்
திண்முரசந் தாங்க விசைத்தன ரந்நகர்
மண்ணுறுத்து மென்னுமச் சொல். (2)

அம்பிகையின் மன்ற லடுத்த மதியினுள்
நம்பதியா ரெல்லீர் நனிவிளைவின்—நும்மகமும்
ஏற்புழி கண்கவர் காண்வரச் செய்யுமின்
மேற்கொள நும்பால வன்பு. (3)

பாதைகள் பொன்னிழைத்த பன்மணிக ளூடுறவக்
கோதைக ணீத்த குளிர்மணியோ—டோதைய
காண்பான் மயங்கி கடிதகன்றான் வடக்கு
நாண்மரபுக் கேதுவா னுடு. (4)

எள்ளிடற் காயினுங் காணாது மண்ணிலம்
எள்ளறு மாறுப் புனைவினையான்—தள்ளற்கில்
பல்கதிரோ னச்சுதீஇ யாறுநீத் தற்றகொள்
தற்சிறப்ப செப்ப லெவண். (5)

செய்யாளே சென்றாங்கு செய்வினைகள் செய்தென்ன
எய்யா வினைநல மெய்தவே—துய்ய
சுடர்களு நானூற்று நைந்து நலியப்
படர்ந்த வொளிர்மணிக ளங்கு. (6)

வெளியிடையி னீங்கினன் வெய்யோ னதுவே
அளிபடர் கண்மாத ருள—வளிமிகலில்
அஞ்சிகை மேற்கட் டழகுபெற வாக்கியதான்
அஞ்சியது காட்டும் வழி. (7)

அஞ்சலிற் செய்கைய வண்டரின் தச்சனும்
நெஞ்சுற்ற தேர்ச்சியிற் றேர்ந்தபின்—எஞ்சலில்
பேரெழில் தோற்றப் புனைவினையின் மேலவாய்
நேர்பெற்ற தம்மா நகர். (8)

எங்கணும் வானளா வெண்மணிசேர் மண்டபங்கள்
சங்கையிற் சீருடன் சேர்த்திருப்ப—தங்குவான்
அவ்வாறு சென்மன்னர் மற்றைய ராட்சிகொள
இவ்வா றியற்றினு ரீது. (9)

மரகதப் பைந்நிறம் பின்னிடு தார்தூம்
கரம்பைக டம்மிலைகள் காலான்—வரம்பிலா
அந்நகர் நண்ணுவா ரார்வத்தா னேற்பபோல்
தந்நிலையிற் றந்த முறை. (10)

போதிகைகள் செங்காய்ப் பவளத்த பீடங்கள்
சோதிதரு மாணிக்கக் கற்களின—வீதிகளில்
செல்வோர் நிழற்காணுஞ் சால்புடைய வைரத்தூண்
எல்செய்து நிற்ப வெளிது. (11)

இத்துணைய வென்ன வியம்பலு மாகாதே
அத்திரு மக்கடம தாக்கமே—எத்துணையும்
தம்மாவ தீரத் தமதன்பர் காணுவா
னிம்மாண் வினைகளே யீடு. (12)

ஒண்டொடி மங்கைய ரெங்கணுந் தோன்றலான்
வண்டுதேர் தேறல தாமென்ன—அண்டவே
தம்முரு கண்டங் கயர்ந்தனர் காளையர்
அம்பெண்கண் ணுரைக்கா ணுது. (13)

வதுவை புகன்ற வருமுலைய ராங்க
ரதுவே யமயமென நோக்கிப்—புதுவரன்
நேர்நில்லாக் காண்பர் நிலையுறமத் தூணகத்துத்
தார்பொலியு மார்பி னழகு. (14)

அரம்பைகள் பூகமொடு மாத்தழை நாட்டி
நிரம்பல வாய நறும்பூ—சிறந்து
பிணைந்த பிணையல்கள் பூகமிசை தூங்க
விணையொடும் வந்த குயில். (15)

சோலைவாய் வைகுஞ் சுகமாதி பற்புட்கட்
கோலை விடுத்தன்ன வந்தடைந்த—மாலையின்
மங்கையரி னுடன் மலித்திடவே தம்மிணையோ
டங்கிருந்து தூண்டுங் திறத்து. (16)

நங்நகர் மாடங்கண் மண்டபத்துத் தோன்றுதலு
மன்னவு முன்னையதிற் காண்ப துவு—நன்னக
ரீங்கடைந்த தொத்ததே மற்றங்கு மிவ்வளம்
ஓங்குமே தன்முறையுந் தந்து. (17)

பொன்னக ரென்னிற் புரந்தரன் காண்கிலன்
மன்னக ரென்னிலோ மாலுமே—இந்நகர்
யாதென்ன வோர்சான்று வேண்டிற்று வேண்டான்றன்
மாதுரை மாமதுரை யூர். (18)

எங்ஙணும் சாற்றருஞ்சீ ரேழ்நிலைய மாடங்கள்
தங்கவு மங்காதி மன்னர்கள்—துங்க
கரிபரியு மள்ளரு மற்றையரு முண்டுறங்கப்
பரிவோ டியற்றியவே பார். (19)

காமதே னுந்தருக்கள் காணக் கரந்திருந்து
தாமங்கு வேணவ தருதலான்—ஏமஞ்சேர்
கோயின் மணிவனங்கட் கொவ்வாவே விண்ணவர்
கோவளத்தின் றன்மையுந் தான். (20)

ஆய்ச்சியா னன்றூன் சுமந்திர னையரின்
தூய்சிற்பி யின்மேலா ரேவலான்—ஒப்வின்றி
நேர்நின்று செய்வித்தான் செய்தனர் செய்வன
பேர்வின் றருள்பெறவே பேசு. (21)

எண்ணரிய மாடங்கள் கூடங்கள் கோபுரங்கள்
நண்ணிலா வாதனங்கள் பெற்றுள—திண்ணிதாம்
தென்னவன் சேயின் திருமணக் கோலங்கள்
பன்னகனுஞ் சாற்ற லரிது. (22)

அன்னையர் மன்றன்ன ளாதரத்தோ டும்பார்த்த
பன்னலத்த மின்னிடையார் பண்புடன்—கன்னல்
கதலியுங் கும்பமுஞ் செம்மணியுஞ சேர்ப்ப
ரதனத னகந் தெரிந்து. (23)

மாடமீ திட்ட மணிசேர் குடங்களே
நீடகான் வேங்கை விளங்கும்பூ—நாடகத்துக்
கார்நினைந் தேத்தரும் தோகைகள் கூடிய
வர்தருவ காண்பவர்க் காங்கு. (24)

இனியநா ணீடித்த லாற்றுமே தம்முள்
நனிவிளைவிற் போற்றி யணங்கு—பனிமொழியார்
என்று மணவினைநாள் நண்ணுமோ வென்றேங்கித்
துன்றுவர வேண்டுவர் துப்பு. (25)

ஐயவி யாதிய வின்மணத்த சேர்ப்பெல்லாம்
மைவிழியார் தூவி மலிந்ததால்—மையலறு
மந்தணரு மையருங் கொண்டனர் விண்டவிலை
முந்தித் தெளிந்தந்த வாறு. (26)

நாறு மகிற்புகை நல்லார் சுரிகுழல்
சீருட னூட்டலான் சேண்சென்று—காருண்டு
பெய்தறரப் பெற்ற பனிக்கடல் பேதற
வெய்த வெறியே மிகுந்து. (27)

பன்னீர் தடம்படிந்து பைங்கொடி யார்கோதை
நன்னாற்ற நெய்யாதி தூபத்தோ—டின்னடிசில்
செய்யகத்த வஃதுமே செய்தவாம் நாளிருள
பெய்யதுறு கொண்டலே போன்று. (28)

பூண்பர் புதுக்கலன்க ளாடைகளு மன்னவாய்க்
காண்பதென் னுமென்பர் மன்றன்னாள்—பாண்டயங்கு
தீஞ்சொலார் நாளொன்று நீடுறு நால்யுகம்போ
லாஞ்செய்வ தென்னேயென் பார். (29)

வானமுதுந் தாமுமா னுக்கிய வின்னமுதைத்
தானவரை யன்றேய்த்த மாயினியின்—மாநலத்த
வஞ்சியர் தம்மகத் தெய்விருந் தூட்டுவர்
தஞ்சேயின் மேலும் பரிந்து. (30)

தங்கணவர் பாற்படுத்த தீஞ்சுவைக ளன்னாரே
தங்கரங்கள் பூரிக்க வூட்டினும்—கங்குலின்
கண்கொளாக் கனல்வர் கனலின்
வெம்மைத் தென்றே வெறிமலர் நீத்து. (31)

அஞ்சனந்தங் கண்ணி னமைவுடன் றீட்டலான்
பஞ்சஞ்சும் பாதங்கள் பாடலான்—அஞ்சிலா
மார்பிடை யம்பொப்ப வஞ்சிலம் பின்பரல்கள்
போர்முரசின் மேலதா வார்த்து. (32)

ஊடலாற் காளையர் பற்றிய மேகலைகள்
ஊடறுந்து வீழ்வ தரைமிசை—நாடுவார்
கண்கள் கவர்ந்திடுங் காந்திய
கண்மை தீட்டிய தெரிவைபி னெழிலே. (33)

மாடங்கள் கிட்டினர் பாணரொடு கூத்தர்க
ளாடல்கள் பாடல்கள் பம்புமே—ஊடல்கொள்
ஆடவர்க ளயர்ந்தறி விழந்து
வாடுவார் வளமனை வீணொன வெண்ணி. (34)

மன்னர்தஞ் செல்வியர் முந்நூலார் மங்கையர்
தம்மக மேவியிது கேட்பரால்—கன்னவில்
மாரனை மாய்த்தவர் மன்றனு ளென்றென
மாறு மனக்கவலை மாற்று. (35)

வந்தவ ரந்தமிகு வாபரணங் கண்டுவப்பர்
சந்தமின் சேடியர் தாங்களே—சுந்தரஞ்சேர்
கோதைகள் மெய்யுறப் பெற்றன பேர்விரை
கோதையர் கோல வுடம்பு. (36)

பாடகச் சீரடி பன்னகைக வார்ப்புதவ
ஆடகத் தாயபூந் தானையுடீஇ—மேடமதின்
மண்டல முற்றென வெம்மை
தண்டக் கொண்டார் தாவால வட்டமே. (37)

மதியினை முற்றுமிகல் வாணுதலா ரந்தம்
பதியினையும் பற்றுறச் செய்ப—வதிசயமாய்
ஞாலத் தில்லாக் கோலம்
சாலத் தாமே சார்ந்தனர் சிறக்க. (38)

மங்கைப் பருவ மடந்தைய ரின்னீடம்
சங்கையிற் சிதமதி சேர்ந்தாங்கு—பங்கமில்
மாலைவாய் மண்டிலம் மின்செய்யப் பூணணி
சோலைவாய் புக்காடி னார். (39)

அன்னவர் பூண்களு மாடைகளுங் கூடியொளி
ரன்னகோட் டன்காண வாற்றுனைத்—தன்னிகரில்
புரவிகள் தாழப் பரவையுள்
விர்வி புக்கான் வெறிவேட் கையொடு. (40)

நிலவிரி மாமணி நீடியநீ ளிஞ்சி
குலவிய சித்திரங்கள் கூட்டிப்—பலவிதமா
மாண்மணி முற்றிழைக்கப் பெற்றவச் சாளரத்து
மாண்புரைப்பா னுனு வழகு. (41)

வானூறு செல்லுகிற வாண்மதி நீரின
கானூ ருடைய கடிகப்பா—மேனோக்கின்
முத்துநவ ரத்தினங்க ளிட்டொளிர் கூரைய
தத்துமில வுள்ளதா மூள். (42)

நூன்முறை நேர்பெற நாட்டிய மண்டபத்து
மாண்புரைக்க மாலணைக்கு மாகாதே—வானோரே
தாங்காணு மெண்ணத்தான் மேவி யகமகிழ்ந்தார்
நாங்காணச் செய்த தெவன். (43)

முன்னூனு மெண்கயமு மூவருந் தங்கணனே
டந்நூன் முறைபிறழா மண்டபத்துள்—தங்நிலைக்குத்
தக்கவா யாதனங்கள் பெற்றன மற்றையர்க்கு
மொக்கமாண் புள்ளனவு முண்டு. (44)

புக்கவர் கண்ணிணைக் காண்கிலாப் பேரொளிசேர்
அக்கனக மாமணிய மண்டபம்—தக்கநூல்
மாற்ற மிசைவதா ணிங்கரு மங்கரென்
சாற்றுப சாலச் சிறப்பு. (45)

வான்றொடு மாடங்கள் வாண்மலி மேன்மணிகள்
தான்றொக்க செல்வத்தான் கோநிகரில்—பான்மையார்
செய்வினை முற்றலான் செய்யாளே செய்தன்ன
எவ்வினை யேதங் குளது. (46)

முத்தலங்கல் தாமத் தொளியருவி போல்வீழ
ஒத்திலங்கு கொண்டற் கொடிகடாம்—உத்தமமா
யொன்பான் மணிகளின் மாலைக ளெங்கெங்கும்
சொன்மாண் பறப்பாய்ந்த போ. (47)

மாகதத் தாற்குயிற்றி மாகஞ்சேர் வாழை
மரகதப் பத்திரிகண் மாண—மரகதக்
கொத்துசூழ் செம்பொன் செழுஞ்சுடர்செய் போதிரெடு
உத்தமமா நாட்டினா ருங்கு. (48)

உத்தமமென் பூக்களி னுற்றமண மிவ்வுலகுஞ்
சித்தர்கள் சிந்திக்குஞ் சீருலகு—மொத்துலவ
கோதைகள் கோதறக் கோவையுாத் தூக்கினர்
கோதைக் கவைக்குஞ்சி யார். (49)

பொன்னுலகி னுங்காணப் போற்றரிய வாதனங்கள்
மண்ணுலகிற் கண்டு மகிழ்வுற—விண்ணுலகே
யாதென் மயங்க வமைந்ததா லம்மாண்பு
யாதென் றியம்புமிந் நா. (50)

அத்தகைய வானோர்க ளஞ்சலித் தேற்றுஞ்சீர்
சுத்தவுள் ளத்தராங் கோசிகர்க்கும்—நித்தமும்
ஏற்பவா யாதனங்க ளங்கிருக்கப் பெற்றவே
நாற்பான் மறையவர்க்கு மாங்கு. (51)

மறையாள ரல்லாத மற்றமுப் பாலார்
நிறைநிறையா நண்ணுவரே லாங்கு—குறைவில்
இருப்புக்க ளுள்ளதா யிட்டதே யந்த
திருப்பொலியு மண்டப மாண்பு. (52)

வேள்வி மணவினைகள் செய்தற் கிடமுளதாய்,
கேள்வி மிகச்சிறந்த வாசாற்கும்—தாழ்விலா
வாசிக டந்தருளு மந்தணர்க்கு மாதனங்கள்
ஏசிலவா யேற்றிருந்த வாங்கு. (53)

வகைவகையாச் சாதி வனிதையர்க் கேற்ப
நகைநகையா நல்லார்க்கும் கற்பின்—தொகைதொகையா
யிட்ட விருக்கைக ளெண்ணிலவா மேனையர்க்கும்
கட்டழகு மிக்க பல. (54)

இனந்தழுவ லிவ்வுலகி லான்மாக்கட் பால
மனந்தழுவல் காமுகற் பால—தனந்தகுந்த
சாயலர்க்குச் சாயலர் சார்பாகச் சேர்ப்பிருப்பக்
காயலர்க்குக் காயலரு மாங்கு. (55)

ஐம்பொறிய வேட்கை யறவே யமுதூட்டும்
பைம்பொன் னிறத்த பரத்தையர்—நைந்துருக
பாடும்பா ணர்க்கும் பரிந்தாடு கூத்தியர்க்கும்
மேடைகளு முள்ளனவா மிக்கு. (56)

எண்ணிலா வாச்சியங்க ளோதுநர்க் கோரிடமும்
மண்ணுடையர் மற்றையருந் தங்கவே—திண்ணிய
தெற்றிகளுஞ் சேய்மையி னிற்றலா னிற்பர்யார்
பெற்றிடங் கொள்ளாப் புறம். (57)

புக்கனர் கொண்டில ரொன்றேனு முற்றாகத்
தக்க வகையான் விரித்துரைக்க—அக்கனக
மண்டப மண்மின ராகுநாள் தேராராய்
கொண்டனர் கோசிகரின் கூறு. (58)

நால்வேத நாற்றூணு யாரங்க விட்டமா
வானிலசெய் முத்தாரந் தாம்பதா—பூநிகர்
ஆடகத் திற்பதித்த காசிலாக் காசிலங்க
பீடமொன் றுக்கினுர் பேசு. (59)

திருச்சிற்றம்பலம்

ஆகவெண்பா 285.

நகராணிபடலம் முற்றும்.

# VII. எழூச்சிப்படலம்

திருச்சிற்றம்பலம்

முன்ன மொழிந்தன மன்றல்செய் மண்டபச்சீர்
பின்னு முரைத்தம் பிறிதொன்று—நன்னகரார்
செய்த திறனுஞ் தெளிவுறச் செப்பினம்
எய்துவம் நல்வினையி னுள். (1)

பெற்றன ரோலை பெரிதுவகை கொண்டதனை
முற்றவு மோதி யுணராமுன்—தெற்றென
செப்பினர் செல்லுமின் செல்வரோ டெல்லீரும்
ஒப்பிலாத் தென்மதுரை யூர். (2)

அங்க கலிங்க மகத வவந்தியும்
கொங்க விராட மாராடமுஞ்—சிங்களமோ
டுங்குள்ள பல்லவ கோசல பாஞ்சால
தாங்காது சென்ற தரை. (3)

சோனக கீழ்ச்சீன சாளுவ மாளவ
தானகச் சீர்மிக்க காத்மீர—வேணவ
மட்டின்றி யீயுநன் னேபாள வைதர்ப்ப
முட்டின்றி முன்னின வாங்கு. (4)

கருநாட காந்தார கேகைய பௌஉர
குருநாட மச்ச மிலேச்ச—திருமிகு
கூர்ச்சர செஞ்சைய சௌஉராட்டி ராதியர்
பார்நெளியச் சென்றூரப் போது. (5)

வந்த வரசர்க டம்வரவு வாயிலோர்
சுந்தர சிங்காத னத்திரு—சுந்தரிபால்
தாழ்ந்து புகலவும் தாம்வருகை கொள்கென
வீழ்ந்து பணிந்தா ரடி. (6)

தந்தனர் தந்தம் வளங்களின் மேலன
அந்தமி லக்குழாஞ் சென்றுள்ளே—தந்தகவாய்ப்
பெற்றனர் தானங்கள் பேருவகை கொண்டனராய்
உற்ற வுரைத்தன ரீங்கு. (7)

போற்றினா ருண்ணெகிழ மாற்றம் பலமொழிந்து
சாற்றினார் சேருசதும் மாடமென—ஏற்றவரும்
மீண்டன ராங்காங் கினிதா வமைந்தரால்
வேண்டார்போ வீண்காலப் போக்கு. (8)

முல்லை மருதக் குறிஞ்சி நெய்தலின்
தொல்லை விளைவுகளிற் றூயவாம்—எல்லையில்
மாண்பொருள்கள் மாவரையின் மேலாக் குவித்தரால்
காண்பாக்கு வந்தவருங் காண். (9)

கூடுவார் நீத்த கொழித்த சாந்தமும்
ஓடுவா ருடலிற் றெங்கலும்—சூடுவார்
பாய்மா குளம்பைப் பிணைப்ப வழுக்குப
தோய்வவே வீழ்ந்தாரின் றோள். (10)

துளிப்பன தோளில் குமரர்தம் மாலை
ஒளிப்பன மீதுதேன் றுளின்—களிப்புடன்
மாக்கடா மேகலான் மண்டியெழு தார்படலம்
நோக்கறச் செய்ததே நாள். (11)

நினைத்தனரே நந்தியூர் நம்மானார் தம்முள்
புனைந்தேகத் தங்கணங்கள் போக்கிக்—கனைந்தூர்
கொண்ட னிறத்தானும் பூமகனும் ருத்திரனும்
அண்ட ரனைவோரு மாங்கு. (12)

மானு மயனு மவரவர் சூழலொடும்
சானு முறையின் படைகளொடுந்—தோனுடனும்
ஆர்வத்தா னுங்குறச் செல்கென்றார் சீக்கிரமே
யூர்வா ரிரதங்கள் கொண்டு. (13)

எண்ண வரிதாய வக்குழாத் தண்டர்கள்
நண்ணற் கரிதாய கோடிகள்—விண்ணின்றே
ஏகினரான் மூதூர்க்கான் மூதறிஞ ரேத்தவே
ஆகினா ரண்டரே யாங்கு. (14)

மண்ணுளு மன்னவரின் நல்வரவு நாட்டினமுன்
விண்ணுளு மண்டருட னம்மண்ணல்—தொன்னாள்
புகழ்மதுரை மூதூர் புகுந்தமை மன்ற
திகழ் பெறச் செப்புவம் தேர்ந்து. (15)

எண்ணி னுருத்திர ரீட்டம் வகைதொகையான்
நண்ணற் கரிதாகி நாடிய—மண்ணுலகின்
மாதவமேதென் றியம்புவ மண்டர்கள்
வேதந்தோ யூரெய்தல் வேட்டு. (16)

சுவர்க்காதி மூவுலகாள் மைந்தரி னன்னார்
கவர்மனத்த பூதங்கள் கூடி—தவறில்லா
தேசு பொலிநகாஞ் சேருவான் சீக்கிரமே
யேகினா ரெங்குமெல் செய்து (17)

படைவீரர் மாவீரர் தேர்வீர ரோடு
நடைபுரி போர்வீர ரெல்லாம்—நடைதெளி
பாய்மாக்க ளெங்கதியோ டாடுமவ் வார்ப்பொடும்
பாய்புனலின் சேர்ந்தார் பணிந்து. (18)

சாகாத வாறன்று வேகாக் கடுவுண்டான்
ஏகா தசருத்ரர் தாமணுக—நோகாது
எண்மூர்த்தி கட்டாமு மேகினா ராங்கனம்
நண்ணுத னீலோக னேர்ந்து. (19)

இந்தீ வரன்றந்த முந்தைய னேடுபல
பந்திபந்தி யாக வமரர்கள்—வந்தனரே
ஏழேழ் மருத்துக்க ளெண்டிசையர் வான்படரும்
பேழேழ் தோரானு மிந்து. (20)

வர்மதே வன்சுகன் வாய்த்தகண் கைகால்வாய்
நேமமா கக்கொண்ட வேங்கையடி—தாமதே
கோளாகக் கொண்டொழுகு நாரதரு நாடினார்
கேளாயி னோரையுங் கொண்டு. (21)

மூவாறு பால்கணத்தார் முற்றும்வந் தெய்தினர்
ஓவாத வீட்டங்க ளெண்ணில—தாவாத
நற்பயனீ யன்னைய ரேழ்வரு நாடினார்
பொற்பிற் பொலியு நகர். (22)

திருச்சிற்றம்பலம்
ஆகவெண்பா 307.
எழுச்சிப்படலம் முற்றிற்று.

# VIII. எதிர்கொள்படலம்

திருச்சிற்றம்பலம்.

மொழிந்தன மன்னுயிர் தண்ணளியாற் காப்பர்
இழிந்தனு கினமை யீங்கு—வழிந்தோடு
வந்த வருளுடையார் வேட்கை மிகப்பெருகத்
தந்த திறஞ்செப்பு வாம். (1)

அறிவினா னாழ்ந்த சுமந்திர ராங்கு
பரிவினோ ரோசனைமுற் போஒய்—விரிவுடைய
நற்றகையார் சூழ்ந்துவர நண்ணினார் நம்மையர்
சுற்றத்தோ டுங்குதரத் தான். (2)

வந்தன ரீசரெனச் சுந்தர மந்திரிசு
மந்தரன் மிக்கன்போ டேகினன்—அந்தமிகு
சாமரையும் வெண்கொடியுஞ் சத்திரமு முத்தணிய
சேமஞ்செய் யாட்களுஞ் சூழ்ந்து. (3)

வந்தன ரீசரெனச் சுந்தரப் புந்தியனுந்
தந்தனிச் சூழலொடு மங்குற்று—முந்துற
மண்டலத் தண்மிய வெண்மதிய மொத்தனால்
கண்டனிட காலெழுந்து நின்று. (4)

வானத்துத் தூங்குங் குடைகடந் தொங்கல்க
ளானவை யங்கிலங்கு மவ்வகை—வானகக்க
யத்தகத்த செம்மரைசூழ் வெண்மரைய நீரவா
முத்துடைய முற்றுணர்வார் முன். (5)

சூழ்ந்து வந்த சுமந்திரன தஞ்சலிகொண்
டாழ்ந்த வறிவினா யாதரங்கொள்—சூழ்ந்துவரு
நின்சூழற் கண்டியாங் நேயமிக் கோமறிதி
மன்னகம் மன்னுவை முன். (6)

நயந்துரைத்த சொற்க ணளிபணிவோ டேற்று
வியந்தரனார் நோக்க வியம்பல்—சயந்தர
ஆர்த்தெழ வையரோ டன்ன கடலண்டர்
போர்த்தெழத் தந்தனனே யூங்கு. (7)

மாமதுரை வாராமுன் மங்கையர்கண் மங்கலமா
வாமபா கந்தன்னில் வெள்ளியின்—நேமமுடன்
பூர்ண கும்பங்கள் பொலிவுற வேந்திமுன்
ஆர்வமுடன் வந்தன ராங்கு. (8)

மங்கலங்க ளெட்டு மணியணியா முற்கண்டு
துங்கவருண் மாரி துணிவுற்றுப்—பொங்கு
மனத்தினரா யுட்சென்று மன்றனிலை யெய்யக்
குணத்ததுவாத் தந்த பலம். (9)

விண்ணின்றும் மண்ணின்றும் வேணபடி வாச்சியங்கள்
பண்ணினர் பாடல்க ளாடல்கள்—துன்னுமே
வெள்ளியங் குன்றங்கு வேண்டியே போங்தென
உள்ளிய தந்தருள்வான் தேர். (10)

நகர்ந்தனர் நம்மையர் நீணகருண் ணுடா
வுகந்த தவர்கட் கருள—சகந்தன்னில்
மூதூர் மதுரையார் மேன்மைக்கா வந்தனரே
தாதா ணிறைத்தெருவி னீடு. (11)

அணிவகுத்துச் செல்லு மணிகாண மாண்ட
பணியாளர்க் கன்றி யியலர்—தணிவில்
திருப்பணிகள் கொண்ட திருநகருட் புக்கு
சிறப்பணிகள் கொண்டுவந்தார் சீர். (12)

ஆங்க ரணுதமு ணன்ற பணியாளர்
தாங்கி யிருமருங்குந் தானிற்ப—ஓங்கனிகர்
ஐயர் பணிந்து அமைவுடன் சேர்த்தினர்
மெய்யன்பாற் செய்தபீ டத்து. (13)

பீடத் திருந்து போற்றவரைத் தேற்றியும்
நாட நலம்பல நல்கியும்—கூட
லழகுறச் செய்த வணிமாடத் தெய்து
கழகத்தார்க் கீந்தார் விடை. (14)

திருச்சிற்றம்பலம்

ஆக வெண்பா 321.

எதிர்கோள்படலம் முற்று.

# IX. திருமணப்படலம்

திருச்சிற்றம்பலம்

அண்டர்கள் சூழ வரனுரை யுட்டந்து
மண்டி மணிபுனை மாடத்துக்—கொண்டமர்த்திப்
பொற்கோவு மிந்திரனும் போதிலங்கச் செய்கோலம்
பொற்புறச் செப்புவம் பூத்து. (1)

அண்டர்க ளுயக னம்மளகை நாயகன்
புண்டரீ காட்சனும் பெற்றிலா—பண்டைத்
தவத்தா லணிபணி தாம்பெற் றுகந்து
நவவணி சாத்தினார் நன்கு. (2)

பூந்துகிற் கோவணமாப் பூண்ஞா ணிடையிட்டுச்
சாந்துசேர் மார்பகத்து மட்டித்து—வேந்தர்கள்
பத்தியொடு தந்த பணிநாண் மலர்தன்னை
முத்தினொடு சேர்த்தார் முடிக்கு. (3)

செஞ்சுடர்க ளென்ன செவிமாட் டிலங்குப
தஞ்சுடர் மிஞ்சித் தனிக்குழைகள்—அஞ்சுற
பேரிருட்செய் கண்டத்துப் பெய்பணி வெண்டிங்கள்
நேரிய மாலையு மாங்கு. (4)

முந்நூல் வயங்கு மார்பகத்து முன்னுலவு
பன்னூறு பான்மதியி னாமும்—சொன்னூல்
திரியாப் பிணைந்து திகடறச் சூட்டினார்
பிரியாப் பிரியமுடன் பேசு. (5)

68066

வாரணப் போர்வையைப் போக்கிப் புதியதாக்
காரணப் பொன்செய் யுடையுடீஇ—பேரணங்கர்
பெட்புறுந் தோளணிகட் பேணுவார்க் கிட்டனர்
நட்புற நல்லாழி சேர்த்து. (6)

அன்பர்கா ணுகா வருமுடியி னன்றலர்
பொற்கொன்றை சூடி பொலிவுற—மன்பதையு
மோம்புதாட் கட்டம்பி லொண்கழ லந்தமிகத்
தாமிட் டுகந்தனர் தாழ்ந்து. (7)

செங்கண்மா லிந்திரனுஞ் செங்கமலச் செல்வனும்
மங்கல மென்ஞான்று மோதவும்—பொங்குமன
வீசனு ரேற்றதை யேற்றின்மே லேறவும்
நேசமொடு தந்தார் தெரு. (8)

அந்தர துந்துமி யாழின ரார்ப்பவும்
வந்த வசுக்களும் பூதரும்—தொந்தமுடன்
கார்குழற் கூத்தியர் காலமொத் தாடவும்
வார்சடையார் வந்தார் வலம். (9)

ஈங்கு நிகடிற னிவ்வாறு நிற்புழி
யாங்கு மகிழ்வுட னெம்மாதா—பாங்கியர்
போற்றிப் புடைசூழச் செய்யாளுஞ் செய்கோலஞ்
சாற்றுவான் செல்வஞ் சிறந்து. (10)

மங்கலப் பூம்புன லங்கைய ராட்டவும்
புங்கவர் பல்லாசி போற்றவும்—சங்குகள்
ஆயிர மாயிரமா யார்ப்பவு மாட்கொள்வார்
கோயிலுட் கொண்டா ரணி. (11)

ஆயிர மாயிரமா வார்த்தன பல்லியங்கள்
மாயிரு ஞாலத்து மேன்மைய—தாயிரு
தொன்னகரிற் றெக்கவத் தேவரி னீட்டமும்
எண்ணிலதே யெண்ணுவர் யார். (12)

ஆர்த்தன ரந்தர துந்துமி யாழினர்
பேர்த்தனர் பாதங்கள் பேரெழிலர்—தூர்த்தன
ஒல்கடற் சும்மை யொருங்கறவே பாணர்தம்
சொல்காண் வழிப்பாடல் சென்று. (13)

யாழ்களும் வேய்களும் யாழினரும் வேண்டுப
போழ்தரு கன்னெஞ்சுங் நன்னெஞ்சா—வீழ்தரு
ஆலின் குழைகளு மாடலறப் பாடினர்
வேலின் வயக்கண்ணார் வேண்டு. (14)

பாவலர் பாடுவர் பாரிற் புகடெரிக்க
நாவல ரேத்துவர் நூன்முறையின்—காவலர்
கைகூப்பி யஞ்சலிப்ப காரோதிய ராட
மைகூர்கண் மின்னிடையார் போன்று. (15)

ஆசிகள் தந்தன ரந்தணரு மையரும்
வேசிக ளாடினர் வேணபடி—மாசிலா
வேந்தர் விரைந்தேகி வேணவெல் லாமியற்றி
சாந்தமொடு நின்றார் சிறந்து. (16)

மங்கலஞ் சாற்றுவர் மென்மொழி யாளரும்
அங்கமா றுய்ந்தாரி னில்லாரும்—சங்கையில்
ஐயரு மந்தணரு மந்தமிகு மண்டபத்துச்
செய்தனர் செய்வன சேர்ந்து. (17)

மதியிணைய வாணுதலார் மங்கலங்கள் பாடி
மதிநகுவெண் பீடத் தமர்த்தி—நுதிவேற்கண்
சீர்மணக் கோலஞ் சிறப்பாகச் செய்தங்கு
நேர்மனத்தா னின்றார் நெடிது. (18)

செம்மரையா டன்னோடு சேராத வெண்மரையாள்
எம்வினையான் யாம்பெறுப பேரென்றே—யிம்முறையும்
ஆண்டெய்தி செம்பஞ்சி னூட்டித்தாள் சேர்த்தனர்
காண்டற் கரிதாங் கலம். (19)

பங்கயமே லன்னம் பவளவாய் விட்டன்ன
நங்கயற் கண்ணியர் நற்றுளில்—தங்கையான்
நூபுரங் கிண்கிணி நூன்முறைய பாதசரம்
மாபுரமும் சென்றிசைப்ப விட்டு. (20)

ஐவகைக் கோவையுட் கோல விரிசிகை
ஐவரத் தானிட்டுத் தாழ்ந்து—கைவகையான்
செய்வல்லார் செய்த சிறந்தபொற் பட்டாடை
செய்யவள் சேர்த்தாள் சுருங்கு. (21)

விரைசேர் நறுந்தேய்வை வேணபடி சாத்தி
திரைதருகார் கூந்த நிகழ—தரைதரு
தண்மலர் மன்சேர்த்துத் தாமழகு செய்தனர்
நண்பகலின் முற்போழ்தி னுடி. (22)

களபத் தலங்கார வற்புதக் காட்சி
உலகத்தார் காணு வுவப்ப—களபத்தி
ணர்சுவை சென்றுசென் றெங்ஙனு மீயுமே
பாரினர் கோருமப் பாங்கு. (23)

திருநுதலிற் றேங்கமழ்நீ லத்திலத மிட்டு
இருபுறமு மீடின் மகரத்—திருப்பகுவாய்
சேர்த்தாள் செய்தவத்தாள் சீரடைய விம்முறையும்
பாத்தாள் பராதிக்குப் பங்கு. (24)

நவமணிசெய் யார முழுநிலவு நேரத்
தவமுனிவர் தங்குங் கிரியின்—துர்வவுருள்
சூழ்ந்தன்ன சூட்டினர் சீர்பிணையல் சாத்தினர்
காழகக் கொங்கை கரந்து. (25)

காந்தாள் கரங்கடமக் கானபொற் காப்புடன்
சேர்ந்தனர் கங்கணங்க டாமிலங்க—ஈந்தாள்
விரல்களுக் கேற்ப வகையாழி யிட்டு
கரங்குவித்தார் கைலைமா துக்கு. (26)

காதிட்ட வொண்குழைகள் கன்னமென் றாமரைகள்
நீதியாப் புட்பிக்க நீழறா—சோதிசேர்
கதுப்புக்க ணக்கன 'வக்குழைக டக்க
மதுநிறத்த வல்லவே மாண்பு. (27)

மைப்படாத் திங்கடன் மன்னிய மீனெனக்
கைப்படாப் போதுகண் மின்னவே—பைப்படாத்
தொண்மணிசேர் திண்கலன்க டம்மினஞே டாங்கிலங்கல்
தண்மதியே தாழுந் திறத்து. (28)

வலம்புரிநேர் கண்டத்து வாலிழைக ளிட்டு
நலம்புரி மேன்மணிகட் செய்த—கலங்களான்
பேரழகைத் தாக்கும் பெருமைத்தென் ஞேதவே
நேரிழையார் செய்த நலம். (29)

திகழிழைக ளம்மெய்யின் சாயலா னஞ்சி
யகலுவபோ லாடல்செய் வண்ணம்—அகமதனில்
தாம்வருந்தித் தாங்கா திவரிடையென் றெண்ணியே
நாமகல்வ திந்நெஞ்ச நன்று. (30)

பிறைமதியும் பின்னிடு வண்ணஞ்செய் நெற்றி
மறைமத மாதிய சேர்ந்த—விரைசெறி
நற்றிலக முற்றமையப் பெற்றவண் ணந்தீட்டிப்
பற்றிகரந் தந்தன ராங்கு. (31)

மருங்கிருப்ப மின்னின் மருங்குலா ராங்கு
பெறும்பணிக ளேதெனப் பார்த்துத்—திருநகர்
வீதிவா யீசனுர் செல்பவனி செப்புவம்
சோதிவாய் சொன்னயங் கொண்டு. (32)

ஓர்சாரி லீசர்க்கு வாசஞ்சேர் பொன்னடப்பை
யூர்வா ரிந்திரனு ரேந்தியே—பார்சூழ்
மணிகளாஞ் சேந்தி மருங்குவர நாளும்
பணிசெய்வான் கால்தரு காலன். (33)

நீர்க்கடவுள் பொற்கோட்ட வெண்மரை தன்கையான்
நேர்ப்பதாக மென்றூக்கி முற்செல்லப்—பேர்பெற்ற
நாட்டியப் பெண்கள் நடிதரப் பொன்னரசு
ஈட்டிலாய் பொன்சொரிந்தா ரீங்கு. (34)

கன்னிய ரொன்பதின்மர் காவிரி யாதியர்
அண்மித்தந் தண்மையுந் தந்தொழுகத்—துன்னிய
நாக ருலகத்த நாகர்நற் சாமரைசெய்
பாகமது பொன்ற திரை. (35)

புட்கொடியு மன்னக் கொடியும் புனலினிடைக்
கட்படு மீற்கொடியுந் தாமோங்கிக்—கட்புலன்மேல்
வானுற்று வீறுடை வேந்தென்ன வைகினும்
தானுறமு னேற்றின் கொடி. (36)

முத்தலைய மின்னிலங்கு மன்னுபடை தன்னிகரில்
சித்தர் கணஞ்சூழக் கைகொண்டு—பத்தியாப்
போவான் வழிமொழிந்து வைரப் படைவைகல்
சோவெரித்தான் சொல்லா வழிந்து. (37)

ஏத்தினன் புட்பதந்த னெம்மையர் முன்னின்று
சாத்தினன் சாத்திரத் துண்மைகொள்—பூத்துளதாம்
சுந்தரன் றந்துள வந்தமிகு மாலையைப்
பந்தமற முந்திப் பணிந்து. (38)

பொன்செய் திகடோர்மீ தின்னபல ரேத்தலான்
நன்னகரார் கண்டு நனிகளிப்பான்—பன்னக
பூடணங் கொண்ட புனிதர் பரிந்துவர
ஊடலோ டுற்று ருவப்பு. (39)

ஆர்த்தன சின்ன மரியயர் காணமன்
பேர்த்தனர் பார்த்தனர் பாவங்கள்—தீர்த்தர்
உலாவினைக் கண்டா ருளமகிழ்வு கொண்டார்
கலாபமயில் போன்றார்கார் முன். (40)

செல்வழி தோறுந் திருவரசர் நின்றிருந்து
நல்வழியே யென்று நனிதாழ்ப—பல்வழியான்
போற்றலர் போற்றுவர் போற்றப் புடையுடனும்
ஏற்றிலர் தானந் தமக்கு. (41)

கோடியா மன்னவருங் கோறழுவி கொள்பபணி
கோடியா மண்டரு மங்ஙனமே—ஓடியே
செய்வர் செயற்பால செந்நெறியிற் சீராகப்
பெய்வர்காண் பூமாரி பூத்து. (42)

விண்ணரசு தன்னகரின் வீறமிய லிங்கருள்
கண்ணன் தொழுதிருத்தா ணூபுரத்தான்—நண்ணலான்
தேன்கொ ளிழுலொத்தும் வான்கொள் பயிரொத்தும்
தாஞ்சூழ்ந்தார் முற்றுந் தவர். (43)

வான்றொடு மிஞ்சி வாயிலுட் சென்றனர்
மான்கொண்ட கையர் மகிழ்வொடு—பான்மதியின்
மேல வதனங்கள் சூழுங் குடைகளிருள்
சாலத் தொலைத்த சிறந்து. (44)

செந்தமிழ் நாடெட்டோ டோர்பஃதின் சேயிழையார்
அந்தமிக வங்குவந்து சேர்ந்தமை—நந்தவனம்
கொங்கசோ கங்காந்தாண் முல்லையுட னீலாதி
சங்கையிற் பூமலர்ந் தற்று (45)

செல்லுஞ் செலவான் சீர்சிலம் பும்மினமும்
ஒல்லு மொலிகடந் தோதலான்—நில்லுமில்
எம்மைநீத் தேகே லெனச்சொல்வ போன்றவை
வெம்மையாற் பற்றியகால் பற்று. (46)

தொழுப கரங்கூப்பிக் கண்ணோட்டஞ் செய்து
உழுவையி னுடையோ னுன்னி—முழுமனத்தான்
சேர்ந்ததஞ் செங்கரங்க ளந்தமிகச் சென்னிமேல்
நேர்தருப பங்கயப் பாங்கு. (47)

மங்கையென் னேற்றுண் மணங்கொள்ள விவ்வரனைச்
சங்கையி னற்றவத்துச் சாதகமே—பங்கணுப்
மாமூதூர் மாடங்கண் மாண்புசே ராவணங்கள்
கோமூன்றுங் கொண்ட வரம். (48)

தென்னவன் றன்மகள் சீர்மணம் பாரானுய்
மண்ணின் விளிந்தனனே மாதோலு—முன்னர்செய்
புண்ணியத்தா னெய்தினள் பூரணனு மிவ்வரனைத்
தண்ணளிசெய் தேவிவனே தான். (49)

அமைவுறப் பெற்றன ளாயிழை யென்பர்
சமர்தொழில் வல்ல சுமந்து—நமர்தேர்ந்
தடையாவிவ் வன்னைமுன் வந்தானைத் தந்தான்
மடையுடைவெள் ளத்தின் மகிழ்ந்து. (50)

அணிக ளணிவ ரவரவர்கட் கேற்ப
பணிசெய்யுஞ் சேடியர் பல்லோர்—மணிதிகழப்
பூம்பட்டி னுடைகள் பொன்னொளிய யாத்தனர்
தேந்துளிபூந் தார்க டரித்து. (51)

ஈசனார் திண்டோட்க ளீமத்தம் பென்னவே
காசுலாங் கொங்கைவாய்க் காய்தலால்—மாசிலார்
கொண்டிலர் மற்றியாதுங் கோல மணமகளை
மண்டி யடையு மனத்து. (52)

மாந்தளிர் மேனியர் மாரன தம்பாய
சாந்தணி கொங்கைகள் கச்சிகப்பப்—பூந்துகில்
சோரச் செவ்வித முதுக்குப
ஆரத் தாளத் தன்மைய நகையே. (53)

அரிவைய ராற்று தகற்றுவர் தாமம்
தெரிவையர் நீப்பர் தெரியல்—மருவிய
சீதத் தேய்வை சூடென
ஏத மனத்தரா யேங்குவர் மாதோ. (54)

அகற்றுவர் தந்தந் திகழிழைக டாளா
திகற்றவி ரின்சுவை யாழும்—பகற்றவிர்
கால மூணுண் ணெஃகின்
சாலத் தீதெனக் கோலங் குலைவரே. (55)

தையலா ரையத்தான் மையலார் தங்கண்க
ணையவே யாவிகொள் ளோம்படையென்—றுய்யவே
செல்வர் சிரந்தாழச் சேரார்
வெல்வகை யின்றே வெறியா யத்தென. (56)

ஒற்றைமா வேற்றின்மே லூருநம் மையனுரு
முற்ற மனத்தமைத்து மாண்பருளான்—எற்றையிவன்
என்னுள் ளுறைந்து மென்னலம்
கொள்ளா தலைக்குங் கொடுமன மெனவே. (57)

திங்களென தம்முடியி னிட்ட பிறையுநமை
வெங்கனலின் வாட்டலான் வேண்டிலமே—எங்கடுயர்
தீர வருளாய் தீரா
நேர நேராய் நீடுமு னலமே. (58)

பவனிசெல் லீசனார் நேசமுட னோக்கி
அவனியி னல்லாரின் றன்மை—தவநெறியின்
கண்ணீர் பெருகக் கலைசோர மெய்ம்மறக்க
எண்ணிலராய் நின்றனரே யாங்கு. (59)

நன்றிகொன் னீரொத்துப் பொற்றொடி பற்றிகலக்
கன்றியஞ் சங்குங் கரமகல—மூன்றகில்
நுண்மருங்கு னீத்து நிலமிசை வீழ்ந்திருக்கக்
கண்ணின்றி நின்றார் கலந்து. (60)

உற்றக்கா லன்னார்கா னீங்காது நூபுரங்கள்
அற்றவரின் பற்றினையே நாடிய—முற்றவும்
பாடகத் தண்மிப் படிந்திருந்த நல்லோர்கள்
நாடாச்செய் நல்வினையே நேர்ந்து. (61)

மின்னகுவேற் கண்ணி மிகுகாத லாற்றுளாய்
சொன்னநிறச் சேயமர்ந்து செல்வாரின்—நன்னலம்வேட்
டுள்ளுவாள் சொல்லுவாள் சோவழித்த புன்னகையா
ருள்ளாரோ வென்வெம்மை யென்று. (62)

கண்டாள் வெளித்தோற்றங் காதலாற் காதலி
கொண்டா ளிருகரமுங் கூட்டுன்னிக்—கண்டிலள்
தன்கொங்கை மாட்டுத் தன்கரங்க ளன்றிமற்
றொன்று முருவாக முன். (63)

சாற்றுவா ளோர்தையல் சற்றுநீ ராய்மின்னே
போற்றுவா ரண்டரை யுண்டாலம்—தோற்றுவகை
முல்லை முறுவலா ருள்ளங்
கொள்ளை கொள்ளுங் கள்ளத் தனமே. (64)

என்மனந் தூதாக வேகினவென் பாலொருத்தி
நின்மலன் கொண்டானென் பாண்மற்றுள்—கன்மனன்
கருதிலன் காரிகையர் காதல்
பெறுதுயர் பெருக்கோ பேசற் கின்றெண. (65)

செப்பினங் கொங்கை சாற்றுவாள் நின்னோக்கால்
தப்பிய மாரனைக் காய்ந்தாங்கு—தப்பிலா
எம்மையுங் காயக் கருதல்
செம்மைத் தேயோ சொல்லுக நீரென. (66)

உருவ மகிழ்வுற வுண்டில ளோர்மங்கை
உருவக் கிழிவரைவான் றேடித்—திருமருவு
மிவ்வைய ரோவியமொன் றுற்றித்தா வீங்கென்ன
கவ்வைத்தென் கேட்டாள் களைத்து. (67)

கண்டிலா ளன்னவூர்தி மண்டியங் கேகுமாறுங்
கொண்டிலள் மின்மழுவு மானிலையும்—விண்டுவும்
வானுலகும் வையமும் வேறுபா டிதென்ன
தானுணரா நின்றாள் தவத்து. (68)

செல்வாளோரா நங்கைதன் செம்பரல் சாற்றவரல்
வெல்வாளே போன்று விடையன்முன்—செல்வாய்
அணிக ளவணடை யாற்று துதிர்ந்து
தணிதியெனு மாங்கேகுந் தாள். (69)

தலைகொள்ளு மார்வத்தான் தாங்காண வெண்ணிக்
கலைகொள்ளாப் பேரெழில் பற்றி—நிலைகொள்வான்
னைந்தோட நல்லணிக ணில்லா திடனிகலப்
பைந்தொடி யோர் பூவுதிர்ந்த கொம்பு. (70)

செங்கண் விடையேறிச் செல்லு மருவமுதை
தங்கட் கொடுமாந்தித் தாமிழப்ப—கொங்கை
யடிபரந்த வெண்வரிப் பட்டாடை யகலப்
படிந்தனரே காமக் கடல். (71)

உம்பர்மா டத்துண்ணின் றுள்ளமென் னில்லத்துச்
செம்பொன்சே ராகத்த சம்புவின்—பிம்பமே
திண்டிறலான் வைகத் தெரியல்க டஞ்செய்கை
மண்டிணிப் பாவையே போன்று (72)

அன்று திரிதரு மிஞ்சிமூன் றோர்கணைக்
கின்றதாச் செய்தபிரா னிச்செம்மல்—நன்றோரா
மன்மதனு முற்ற நிலைதெரிந்து மன்னன்மாட்
டின்பம் பெறாத லெவன். (73)

கொம்பன்னார் நீத்த கிளரொளிசேர் காசுகளும்
அம்பொற் கலன்களின் சுண்ணமும்—உம்பரின்
நன்னாட்டுப் போதுகளோ டின்னாட் டலர்களுந்
துன்னியவே குப்பைத் தெருவு. (74)

பொற்கலன் கொண்ட புனிதநீர் பைந்தழையான்
நற்கரத்த பூசுரர் வீசவும்—தற்கலன்கொண்
டின்னிருடி பன்னியர் நீராஞ் சனமெடுப்பர்
மின்னிடைக ணைய நனி. (75)

வழங்கினா ரேழ்நிற வன்னப் பிடிகள்
கழகத்தார் கண்குறை தீர—விழவெடுத்த
வையனார்க் கையரில் லாரெடுத்தா ராலத்தி
பையவே போந்தா ரகம். (76)

எண்ணரிய வீதங்க ளோர்மிக்க மன்சுவைய
விண்ணவரே கொள்ளும் விரைமலர்—நண்ணுவார்
பாத நனைதருவ பைந்துகின்மே லந்தர
மாதவ ரிட்டார் மலிந்து. (77)

சொரிமலருங் கீழ்மலரும் காழகத்தின் மேல
வரிமலரும் வானத்தார் வேண்டி—மறியுடையார்
நீண்முடியுஞ் சீரடியு நீர்பெருகச் செய்தவே
ஈண்டாகுஞ் செய்கைத் திறம். (78)

மங்கலப் பெண்களொடு தங்கலிலாக் காஞ்சனையுஞ்
சங்காதி யார்ப்பத்தா னங்குற்று—பொங்குமனத்
தானன்னீ ரன்னு ருதவவந் தாளலம்பித்
தானுந் தலைகொண்டா ளாங்கு. (79)

பாதமென் பூமேனீர் பட்டாடை தொட்டுலர்த்திச்
சீதமென் சேர்தேப்வை சாத்திச்சங்—கீதங்க
ளார்க்கு மவையகத்துக் காஞ்சனை தாஞ்சொல்வார்
தார்பாதத் தாரிட்டுத் தாழ்ந்து. (80)

கொள்க கரமுவப்பான் காதலார் கன்னியின்
விள்க விரிவாக நம்முள்ளம்—உள்க
எனதன்ப ரீட்ட நிதியு மரசு
மனதாரத் தந்ததன் மாண்பு. (81)

ஏற்றன ரம்மாற்ற மீதெதிர் தானெனத்
தோற்றவே தண்முறுவ லுஞ்செய்து—போற்றவேம்
அஞ்சன்மி னஞ்சன்மி னென்பபோற் றங்கண்ணன்
மிஞ்சன்பு காட்டினர் முன். (82)

மன்றலி நாழிகை நண்ணுமவ் வெல்லையும்
மன்று ளரம்பைய ராடுவர்—துன்றுசுவை
பாடல்கள் பாடுவர் பாணர் நரம்பிசைத்து
நாடலரி யாச்செல்லு நாள். (83)

நல்லோரை வந்தக்கா ணம்மன்னே நங்கைமார்
பல்லோர் பரிந்துகரந் தாங்கிவர—எல்லோங்கும்
தண்கயத்த தாமரை தேடிச்செல் லன்னம்போல்
பண்புளார் பேர்த்தார் பதம். (84)

அந்தர துந்துமி யார்த்தனர் யாழினர்
சிந்தை மகிழ வலர்பொழிந்து—முந்தைநாள்
செய்தவத் தோர்மகிழச் செம்மலின் குற்றதனுன்
எய்தசிறப் பீதெனவே யெண் (85)

ஐயர் தவப்பயனுக் கண்டவிக் காரியமும்
ஐயர்சேர் மற்றையரு மேற்றன—ரையர்க்கு
மானுவிக் காட்சிபான் காண்பெற்ற வங்நகர்
மேனுளின் மென்மையின் மாண்பு. (86)

நண்ணிய வக்குழாம் நாடிய நம்மன்னே
துன்னி யிருமருங்கு மீர்ங்கோதை—பன்னிரு
மின்னனுர் சாமரைகள் சேர்ப்பவுஞ் சத்திரங்கள்
நன்மலர்கைக் கொண்டனிலை நாடு. (87)

சங்கங்க ளார்த்தன சங்கையிலாத் தூரியங்க
ளெங்கு மொலித்த மகரயாழ்—புங்கவ
ராசிகள் சேர வமர்ந்தன ரன்னேயார்
பாசிலை யாசனம் போந்து. (88)

அந்தரத் தார்த்தனர் துந்துமி சுந்தரரின்
அந்தமிகு மன்றன்னு ளின்றென்ன—தந்தன
ரேந்திழையார் மங்கலங்க ளெட்டு மவணிட்டு
ஏந்தலைப் போற்றினர்பூக் கொண்டு. (89)

நடித்தனள் சுந்தரி யந்தமிக முந்தி
பிடித்தன ளூர்வசி பெற்ற—கடிமிக்க
நாண்மலர் நேரிய நுண்கரத்தாற் பொற்களாஞ்சு
வாண்மதியர் தந்தனர் வாழ்த்து. (90)

ஊர்வசி யுள்ளத் துவகையுற வாலவட்டம்
பேர்மணி பக்கத்துப் பேர்த்துகைப்ப—தார்கமழ்
மேனகை தன்னோ டரம்பை திலோத்தமை
வானகரின் மேலு மகிழ்ந்து. (91)

பன்னீரின் றண்மலர்க ளன்னமேற் றாவுவர்
சொன்னீர வல்லாத சுண்ணமு—மெங்நேரம்
வாச மிகுபுகைகள் வாள்விழியார் கைக்கொண்டு
நேசமொடு நின்றார் நிறைந்து. (92)

நிலன்மே விட்டபூம் பட்டாடை மூடக்
கலன்சேர் பணிமொழியார் பெய்த—நலன்சேர்
தூவிதழ் கிள்ளியிடைத் தூவிய பூவஞ்சும்
மாவிதழ் பாதம் பெயர்த்து. (93)

நூபுரங்க ளெங்கு நுவலொலி யந்தணருந்
தூபுர வாசிகளுந் தேருவான்—மாபுரத்து
முன்னாலோ டொன்றி மொழிவன போன்றவே
நன்னூலி னழிகை நன்கு. (94)

அன்னப்பே டைகட்கே யன்னநடை கற்பித்த
மென்மலர் பாத மெலிவேகிப்—பன்மணிசேர்
பீடத் தாளு ரருகி லமர்ந்தனர்
தேடரிய வீடியுந் தாய். (95)

இனிதிருந்த வீசனு ராசனத் தும்பர்
தனிதிரு தாம்வீற் றிருத்தல்—நனியொப்ப
கற்பகத்தை யண்மியோர் காமரு வல்லிப்பூ
நற்பண்பா ரேயறிய நன்கு. (96)

அண்ணனூட னன்னை யமர்ந்திருந்த வங்கிலை
எண்ண வியலா வியல்பிற்று—வண்ணஞ்செய்
நீரு மணியு மலரு மணனம்ம
வேறுவே ருயுருகொண் டாங்கு. (97)

அம்மன்றற் காண்பார்க ளண்டரு மண்டலத்துச்
செம்மனத்தார் பன்னகரு மன்னபிற—தம்மனத்தான்
மெத்த தவத்தினர் சித்தர்கள் சாரணர்
சுத்த பரிபூரணஞ் சேர்ந்து. (98)

ஆயபோ தாழிகை யண்ணல் கரகநீர்
சேயவான் சோதிநடச் சேவடிக்கு—நேயமொடு
பாத்தியந்தந் தம்மலராற் பூசித்தார் மன்மணஞ்சேர்
சாந்தமுஞ் சேர்த்தார் சிறந்து. (99)

கொண்டார் புனிதர் புனலுள்ளா மண்டர்களும்
பண்டார் பழவினைக டீர்ந்தென்னக்—கொண்டார்
பலரும் பணிந்தெழுந்து பத்தியொடு நின்றார்
நலனுற நாடியே யாண்டு. (100)

ஆற்றின ரந்தணர் செந்தீமுன் சீரெலாம்
போற்றின ரையரு மம்மையுஞ்—சாற்றினர்
மங்கலக் கங்கணம் புங்கவர் பன்னியரோ
டங்கடைக வாக்க வினிது. (101)

பால்பெய்த பாத்திரத்துப் பாவுசரு ணாலது
வேல்விழியா ரைவர் விரவித்தம்—பால்கணவர்
நின்ற நிலையினில் நீள்சரு டங்கரத்துச்
சென்றசெறிந் தீரொன்பா னங்கு. (102)

இட்டனர் சேடையாங் கேற்ற வமயத்து
முட்டின்றி யவ்வேள்வி முற்றியபின்—கட்டினர்
கங்கண மையரு மன்னையு மொன்றாகத்
தங்கரத்து முங்கரத்து மொத்து. (103)

ஆர்த்தன ரந்தர துந்துமி யந்தரர்
தீர்த்தன் றிருமண நாழிகையின்—போர்த்தாங்கு
பெய்தமலர் மாரி புவிகாணற் கின்றியே
செய்தனர் செப்ப வரிது. (104)

ஐயர்க ணின்றனர்தம் மெய்ம்மறந் தேயங்கு
செய்ய முனிவரு மானிடரு—முய்யநற்
காட்சியினுக் கேயங்கோர் சாட்சியா நின்றனர்
மாட்சிபெறத் தம்மனமு முய்த்து. (105)

எண்ணிறந்த வாச்சியங்க டாந்தா மெனமுழங்க
நண்ணிலரும் வந்து நனிதாழப்—பண்ணினர்
பல்லாண் டிசைப்பப் பணிமாதர் பாஅுஅட
நல்லோரை யூட்டினர் நாண். (106)

பணிமகளிர் நின்றனர் பல்சோதி தாங்கி
யணிமகளிர் நின்றனரம் மன்றுள்—தனிமகளிர்
தங்கையிற் றாங்கிய தூவரிசி தூவினரால்
செங்கையாற் செல்விமேற் சேர்ந்து. (107)

உலகெலா மோம்புவா ரும்பருல கின்னிங்
கலகிலாச் சத்தியருங் கூடிப்—பலரறிய
மன்றல் செயவந்த மாண்பினை மாண்பினரே
நன்றறிவா றன்றிபிற ரின்று. (108)

வந்தனர் செந்தீ வலங்கொண்டங் கன்னையொடு
அந்தமிக் கார்ப்ப சிலம்புகள்—பந்தமிகல்
பாடகச் சீரடி பாடப் படிந்தம்மி
நாடகக்கா ணட்டினர் நன்கு. (109)

நோக்காய் மீனோக்கி மீனுபய மந்தரத்து
வாக்கானும் போற்றுய் வகையுடன்—நீக்கரிய
நேயத்தா னைத்த வருந்ததியே நேருவாய்
சாயலார் தாயானுய்த் தேர். (110)

சுற்றித்தாம் வந்தபின் செய்தவவ் வேள்வியை
முற்ற முடித்துநம் மாதாகை—பற்றியே
போந்தார் மணவரையின் மண்ணவரும் விண்ணவரும்
சோர்ந்தார்தந் நோக்கினை நொந்து. (111)

மணிதரு மெம்மையர் காட்சியா னானார்
புனித விமையவ ரென்னின்—நனிதருவான்
வல்லரா ரந்தணரு மையரு மேற்றநிலை
புல்லார் பிறவிப் பிணி. (112)

செய்யகூத் தாடிதாள் செம்மனத்தாற் சேவித்தா
ருய்யவே யும்பரைச் சேர்த்ததான்—பையவே
மாசிறத் தேய்த்த மணிச்சுடரின் மேலாய
தேசுறவே நின்றார் தெளிந்து. (113)

மன்றற் றவிசகன்று மாட வணிப்பள்ளி
கொன்றை நறுஞ்சடையார் கூடினார்—நன்றிசெய்
தேவர்க டம்மிடஞ் செல்லச் செலவருளி
மேவினார் தென்னவனைத் தேர். (114)

கன்னன் முதலவர் கண்டையர் கொண்டவுருத்
தங்நக ரேகாராத் தங்கினர்—அன்னாரின்
சேவையி னீங்காராச் சேவகரே யாகினர்
மாவைப்பின் மாலிங்கம் போற்ற. (115)

விடைக்கொடியு மார்பகத்து வீழ்ந்தாடு நாக
மிடையுடீஇய வேங்கை யுரியும்—சடைமகுடம்
மீற்கொடியும் பொற்கலனும் பீதாம் பரமுமாம்
சீர்சான் மணிசேர் முடி. (116)

மார்பகத்துத் தூங்குமம் மன்னு நறுங்கடுக்கைத்
தாரதுவும் வேம்பலரின் றாராகப்—பாரதனில்
நால்வேத நின்றோது நான்மறை யாளர்சேர்
வாணகரில் வைகினார் வேந்து. (117)

மறைமுறையின் மாமதுரை மன்னரே சான்று
தரையினிற் றாமோ ராசாய்—நிறைமனத்தான்
நின்மலனை மூர்த்தியை நித்தமும் பூசித்து
பன்முறையுங் காட்டினார் பண்பு. (118)

ஆதியா மைய ரகலிடத் தாணைசெய்
சோதியா மீசனூரு பூசித்தார்—மேதினியில்
அப்பதியை மேவினரு மவ்வரனைப் போற்றினரும்
அப்பதமே சேர்வா ரறி. (119)

சரிதையிற் சீர்மிக்க வீசர் சரிதம்
பரிவுடன் பாடிப் படிக்கப்—பரிகரிதேர்
நன்மகவு நல்வாழ்வு நல்கு நசையறவே
பொன்னுலகு முய்த்துவிடும் போற்று. (120)

திருச்சிற்றம்பலம்

திருமணப்படலம் சம்பூர்ணம்

ஆக வெண்பா 441.

# நூற்பயன்

திருச்சிற்றம்பலம்

பூமேவு மன்னை புனைந்தொழுக புட்பங்க
ளுமேவு மன்னை நலஞ்செய்யப்—பாமேவாய்
பண்புடைய தாகவும் பத்தனது கோரிக்கை
இன்புடைய தாகவு மீண்டு. (1)

நாடோறு மீனாட்சி நன்மணத் தோர்கவி
நாடோரு மோத நலம்பெறுப—தேடோராய்
வையத்து வேண்டிய வேண்டியாங் கெய்தப்பால்
ஐயரடி கீழுறைவா ராங்கு. (2)

கல்வி பயில்கின்றார் கற்கினுங் கேட்கினுங்
நல்லறிவு நாளுயர வல்லாராய்—சொல்லறிவின்
சான்றோருஞ் சாலச் சிறந்துரைக்கு மாண்பினரென்
றான்றோருள் வைப்பா ரறிந்து. (3)

கன்னிய ரோதக் கருத்திசை காதலனும்
பன்னிய ரோதப் பலபொருளும்—மன்னிழந்த
வேந்தர்க ளோதலான் வென்றியு மெய்வரால்
நேர்ந்த மனத்தினர்நன் றாடு. (4)

சேரார் அபமிர்தது செஞ்சுடர் வெந்தழலான்
போரா வருதெவ்வர் பாழ்ப்படுவ—ரோராத
தீமனத்தார் தீய்ந்து தவறு தொழிவரே
மீமனத்தார் மூன்னுவார் முந்து. (5)

இல்லார்க ளோதலி னின்மை யகலுமற்
றல்லா ரடைப வுயர்பொரு—ளொல்லாநோய்
அண்டாம லேகு மடுத்தாரி னீங்குமே.
உண்டாகு முள்ளத் துவப்பு. (6)

இறுதிதரு மந்தகனு மிந்தகவி யோது
முறுதி மனத்தினர்பா லூடான்—கருதியே
காலையி னுடோறுங் கங்கை படிந்தோத
மாலையு நீங்கு மலிந்து. (7)

ஓதியபின் னும்முன்னு மொண்மலர் கொண்டேத்தி
நீதியொடு நாளிகே ளங்கனியுஞ்—சோதிதரு
கற்பூர வாரதியும் பொற்பா நிவேதித்துச்
சொற்பாவாற் போற்ற பரிந்து. (8)

திருமச்சந் தீருந்தீ ராநோயுந் தீக்கோள்கள்
மாறுந்தம் வெம்மையு மானிடர்க்குக்—கோருமெக்
காரியமுங் கைகூடுங் காலவா யுண்ணீளும்
மாரியும் பெய்யு மலிந்து. (9)

ஆதிசத்தி யம்பிகை மன்றனு லோதுவாரும்
ஓதிய கேட்பாரு மோதுவிப்பார்—மேதினியில்
மேலவெல் லாம்பெற்று மேன்மை பெறவிளங்கி
மேலநிலை மேவுவார் முற்று. (10)

திருச்சிற்றம்பலம்.

நூற்பயன் சம்பூர்ணம்

ஆக வெண்பா 451.

68066

# பரிசோதனைப் பத்திரம்

| பக்கம் | செய்யுள் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- | --- |
| 5 | 2 | 1 | மேய்ந்துதிரு | மேய்ந்துதிருக் |
| — | 3 | 3 | குன்றெய்தி | குன்றெய்திப் |
| 8 | 1 | 2 | யங்களாக | யங்களாகத் |
| 9 | 2 | 2 | துசன்றனது | துசன்றன |
| — | — | — | இம்மை | திம்மை |
| — | 4 | 1 | மன்னுயிர்கள் | மன்னுயிர் |
| 11 | 16 | 2 | முகை | முலை |
| — | 17 | 3 | ஷை | ஷை |
| 12 | 25 | 3 | யெலலை | யெல்லை |
| 14 | 36 | 2 | வெறிநிறைக் | வெறிநிறை |
| — | 37 | 2 | லுள்ளத்து | லுள்ளத்துக் |
| — | 39 | 1 | மூன்றேந்தி | மூன்றேந்தித் |
| — | 41 | 2 | வந்தவரை | வந்தவரைத் |
| — | — | 3 | முற்ற | முத்த |
| 15 | 48 | 4 | சொன்னார்கள் | சொன்னார்சீர் |
| 16 | 49 | 1 | கேட்டுவப்ப | கேட்டுவப்பச் |
| — | 52 | 4 | மேமகிழத் தான் | மேமகிழக் கண்டு |
| 17 | 56 | 2 | நாண | நாணப் |
| 18 | 66 | 2 | பங்கமற | பங்கமறப் |
| — | 68 | 2 | சாத்த | சாத்தக் |
| 21 | 16 | 1 | ரின்றாக | ரின்றாகத் |
| — | 18 | 2 | வாற்றற்கா | வாற்றற்காச் |
| — | — | — | சங்கையில் | சங்கையில |
| 23 | 28 | 1 | யன்முற் | வீரன் |
| — | 33 | 4 | யேதமிற் | ஏதமிற் |
| 24 | 35 | 2 | இடைவிடா | புடையொடு |
| — | — | 3 | வின்பமீ | மின்பமீ |
| — | 37 | 1 | னக்காட்டு | னக்காட்டுப் |
| — | 41 | 1 | அன்னே | அன்னா |
| — | — | 3 | காண்பாக்கு | காணுவழி |
| 25 | 45 | 3 | வேந்தனுக் | வெந்தனுக் |

| பக்கம் | செய்யுள் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 27 | 57 | 4 | பின்பிறவிப் | பிற்பிறவிப் |
| — | 58 | 2 | லாளாய் | லாளாய்த் |
| — | 59 | 2 | நசையற | நசையறச் |
| — | — | 3 | கொண்டார்கள் | கொண்டனர் |
| — | — | 4 | தொக்கு | தந்து |
| 29 | 8 | 2 | தாங்கொண்டு | தாங்கொண்டே |
| — | — | — | அங்குறுவர் | யங்குறுவர் |
| 32 | 28 | 1 | சூலங்கள் | சூலமுஞ் |
| — | 29 | 3 | நீசர்சார் | நீசர்சார்ச் |
| — | — | — | விசைதொண்டு | விசை கொண்டு |
| — | 31 | 3 | தலைகொண்டு | தலைகொண்டுத் |
| — | — | — | நம்முன்னர் | தம்முன்னர் |
| 39 | 19 | 2 | துங்க | துங்கக் |
| — | — | 3 | முண்டுறங்கப் | தங்கப் |
| — | — | — | மற்றையரு | மற்றையருந் |
| — | 20 | 3 | மணிவனங்கட் | மணிவளங்கட் |
| 41 | 33 | 1 | பற்றிய | கைப்பற்று |
| 42 | 39 | 4 | சோலைவாய் | சோலைவாய்ப் |
| 46 | 2 | 2 | தெற்றென | தெற்றெனச் [தல் |
| 47 | 9 | 1 | குறிஞ்சி நெய்தலின் | குறிஞ்சிக் குளிர்நெய் |
| — | — | 3 | மாண்பொருள்கள் | மாண்பொருள் |
| — | 10 | 1 | கொழித்த | கொழித்தநற் |
| 49 | 1 | 2 | இழிந்தனு கினமை | இழிந்த னுகினமை |
| 51 | 4 | 1 | ளென்ன | ளென்னச் |
| — | 5 | 3 | சூட்டினர் | சேர்த்தார் |
| 54 | 27 | 2 | சோதிசேர் | கோதில் |
| 55 | 33 | 2 | யூர்வா | யூர்வரா |
| — | — | — | ரிந்திரனு | விந்திரனு |
| 56 | 37 | 2 | கைகொண்டு | கைக்கொண்டு |
| — | 39 | 2 | பன்னக | பன்னகப் |
| 57 | 44 | 1 | மிஞ்சி | மிஞ்சிய |
| — | 46 | 1 | செலவான் | செலவினன் |
| — | 47 | 1 | கண்ணோட்டஞ் | கண்ணுட்டஞ் |

4A
5-58

இப்புத்தக ஸோல் எஜண்டு :—

**S. V.** நஞ்சுண்ட ஐயர்,

திருப்பூர்.